பக்கங்கள்: 11

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2053 கார்த்திகை 20 செவ்வாய்க்கிழமை 06.12.2022 கதிர் 31

## இனி இது ரகசியம் அல்ல!

வடக்கு ஆளுநர் ஜீவன் தியாகராஜா இப்போதெல்லாம் அடிக்கடி இந்தியாவுக்குப் போய் வருகின்றார் என்று செய்திகள் வெளிவருகின்றன. அதனாலோ என்னவோ அங்கிருக்கும் பழக்கம் ஒன்று அவருக்கும் தொற்றிக் கொண்டு விட்டது ☞2

## டீசல் விலை ரூ.10 குறைப்பு

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா ஐ.ஓ.சி நிறுவனங்களினால் விநியோகிக்கப்படும் ஒட்டோ டீசல் ஒரு லீற்றரின் விலை நேற்று நள்ளிரவு முதல் குறைக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஒரு லீற்றர் ஒட்டோ டீசலின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய ☞2

## காஸ் விலை அதிகரிப்பு

லிட்ரோ நிறுவனம் நேற்று நள்ளிரவு முதல் உள்நாட்டு எரிவாயுவின் விலையை அதிகரிக்க தீர்மானித்துள்ளது.


அதனடிப்படையில் 12.5 கிலோ எரிவாயு சிலிண்டரின் விலை 250 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 4,610 ரூபாவாகும்.

அத்துடன் 5 கிலோ ☞2

# ஆளுநர் உருவாக்கிய சட்டத்தை ரத்துச்செய்ய ஜனாதிபதி பணிப்பு

### நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் நீதி அமைச்சருக்கு நேரில் வழிகாட்டல்






**கொழும்பு, டிசம்பர் 06**

**வடக்கு மாகாண சபையின் நியதிச் சட்டங்கள் என்ற பெயரில் வடக்கு ஆளுநர் ஜீவன் தியாகராஜா தம்பாட்டில் வர்த்தமானி மூலம் அறிவித்த விடயங்களை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றையஅமைச்சரவைக் கூட்டத்தில் வைத்து நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷவைப் பணித்தார் என்று நம்பகரமாக அறிய வந்தது.** ☞2

## இனப்பிரச்சினையைத் தீர்க்க இதயசுத்தியுடன் செயற்படுக!

### சிங்களத் தலைமைகளிடம் சுரேஷ் வேண்டுகோள்



(ந.லோகதயாளன்)

உண்மையானதும் நேர்மையானதுமான தேசப்பற்றுடன் நாட்டின் தற்போதைய நிலைமையைக் கருத்தில் கொண்டு, தேசிய இனப்பிரச்சினையைத் தீர்த்து, அனைவரும் சம உரிமையுடன் சம அதிகாரத்துடன் ஒவ்வொருவரின் சுயமாரியாதையையும் சுயகௌரவத்தையும் காப்பாற்றிக்கொண்டு ☞2

## ராஜித, வெல்கம, துமிந்த மூவருக்கும் அமைச்சர் பதவி வழங்க ரணில் முடிவு?

அமைச்சரவையில் மேலும் மூவரை விரைவில் அமைச்சர்களாக இணைக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார் என்று அரசியல் தகவல் தரப்புக்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி, முன்னாள் அமைச்சர்களான குமார வெல்கம, ராஜித சேனாரத்ன மற்றும் துமிந்த திஸாநாயக்க ஆகியோர் புதிய அமைச்சரவை அமைச்சர்களாகப் பதவிப் பிரமாணம் செய்து கொள்ளவுள்ளனர் என்று அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்களில் குமார் வெல்கம போக்குவரத்து அமைச்சராகவும், ராஜித சேனாரத்ன சுகாதார அமைச்சராகவும் எதிர்வரும் நாள்களில் பதவிப்பிரமாணம் செய்துகொள்ளத் தயாராகவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. ☞10

## குமார் வெல்கம திடீர் சுகவீனம்

சிங்கப்பூரில் இருந்து இலங்கை வந்தடைந்த நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம, விமான நிலையத்தில் ஏற்பட்ட திடீர் சுகயீனம் காரணமாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க விமான ☞10

## மட்டக்களப்பில் திரும்பவும் ஒட்டுக்குழுக்கள் கைவரிசை

### சாணக்கியன் எம்.பி. கேள்வி



மட்டக்களப்பில் மீண்டும் ஒட்டுக்குழுக்களின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கேள்வி எழுப்பியுள்ளார்.

மட்டக்களப்பு மத்திய வீதியில் அமைந்துள்ள அவரின் ☞10

## பாடசாலை கன்ரீனில் ஐஸ் பொதி

கம்பஹா, டிசெ.06

பாடசாலை ஒன்றின் சிற்றுண்டிசாலையில் இருந்து 7 ஐஸ் போதைப்பொருள் பொதிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர். ☞10

## ஓமானில் துன்புறுத்தலுக்குள்ளாகிய எங்கள் பெண்களைக் காப்பாற்றுங்கள்

### வவுனியாவில் நேற்றுப் போராட்டம்



(வவுனியா நிருபர்)

ஓமானில் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்ட எமது பெண்களைக் காப்பாற்றுங்கள் எனக் கோரி வவுனியா, இலுப்பையடிச் சந்தியில் நேற்று கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. ☞10

## பாதுகாப்பற்ற ரயில் கடவையைச் சீரமைத்து காவலாளியை நிறுத்தக் கோரி ஆர்ப்பாட்டம்



(வவுனியா நிருபர்)

வவுனியா, மெனிக்பாம் பகுதியிலுள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவையைச் சீரமைத்துக் காவலாளியை நிறுத்துமாறு கோரி அப்பகுதி மக்களால் நேற்று ☞10

## தீர்வுக்கு நீதியான முயற்சிகளை முனெடுத்தால் கூட்டமைப்பு ஆதரிக்கும் என்கிறார் சுமந்திரன்



இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உண்மையான முயற்சிகளை எடுத்தால் மட்டுமே தமிழ் தேசியக் கூட்டமைப்பு முழுமையான ஆதரவை வழங்கும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பு நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்துள்ளது.

இதற்கு மாறாக இவ்வாறான தீர்வுகள் வெறுமனே பூசி மெழுகுவதாக இருந்தால் அதற்கு கூட்டமைப்பு ஆதரவு வழங்காது எனவும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற ☞10

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போலும்.

அங்குதான் - இந்தியாவில்தான் - ஒவ்வொருவருக்கும் அவரவர் ஜாதிச் சான்றிதழ் உண்டு. இங்கு ஜாதி பற்றிப் பேசப்பட்டாலும் அது ஓர் எழுதப்பட்ட விடயமாக நிலை நிறுத்தப்படவில்லை. ஆனால் இந்தியாவைப் போல் இங்கும் வடக்கில் தமது நிர்வாகப் பிரதேசத்தில் அதை நிலை நிறுத்தி விடுவார் போலும் இந்த ஆளுநர் என்று தோன்றுகின்றது. அவரது நடவடிக்கை அப்படியான சந்தேகத்தைத்தான் ஏற்படுத்தி நிற்கின்றது. விடயம் இதுதான்:-

"கடற்றொழிலாளர்கள் சமூகத்தை சேர்ந்த மாணவர்களின் கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பெறுபேறுகளை சமர்ப்பிக்குமாறு, வட மாகாண ஆளுநரின் கடிதத்துக்கு அமைய, வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் அதிபர்களுக்கு வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கடற்றொழிலாளர்கள் சமூகத்தை சேர்ந்த மாணவர்களின் கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பெறுபேறுகளை 2011இல் இருந்து 2021வரை பகுப்பாய்வு செய்து டிசெம்பர் 10 ஆம் திகதிக்கு முன்னர் அறிக்கை சமர்ப்பிக்குமாறும் வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளரால் வலய கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் அதிபர்களுக்கு பணிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமாரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, குறித்த சமூகத்தைச் சேர்ந்த மாணவர்களின் பாடசாலை இடைவிலகல் அதிகரிப்பு மற்றும் பெறுபேறுகள் குறைவடைதல் தொடர்பில் பகுப்பாய்வு அறிக்கையை கோரியுள்ளார் எனர் தெரிவித்தார்.

"எவ்வித இன, மத, சமூக பேதமும் இல்லாமல் பாடசாலையில் மாணவர்கள் கல்வி கற்கும் போது குறிப்பிட்ட சமூகத்தின் விவரங்களை மாத்திரம் திரட்டுவது மாணவர்கள் மத்தியில் வேறுபாடுகளை உருவாக்கும்" - என இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றம்சாட்டியுள்ளது.

- இதுதான் விடயம்.

கடற்றொழிலாளர் சமூகம் என்று பிரித்து விடயத்தைத் திரட்டுவதே சாதி வேறுபாட்டின் அடிப்படையில் விடயங்களைத் தேடுவதுதான்.

மண்ணின் வாசனை, மண்ணின் பிரச்சினைபுரியாதவரை- தெரியாதவரை - ஆளுநராக்கினால் இத்தகைய சிக்கல்கள் உருவெடுப்பது தவிர்க்க முடியாதுதான்.

***

இதுவும் மாகாண நிர்வாகத் திறமை பற்றிய ஒரு சாதனைதான்:-

க.பொ.த உயர்தரப் பரீட்சை தொடர்பாக கொழும்பில் கல்வி அமைச்சு நடத்தும் கருத்தரங்கிற்கு வடக்குக் கல்வி அதிகாரிகள் அனைவரும் கூண்டோடு ஒரே பஸ்ஸில் பயணித்தனர்.

வடக்கு மாகாணத்தின் ஆறு பரீட்சை நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் அடங்கலாக உயர் அதிகாரிகளே நேற்றைய தினம் கொழும்பு கல்வி அமைச்சிற்கு ஒரே பஸ்ஸில் பயணித்தனர்.

கல்விப் பணிப்பாளர்களிற்குத் தனியான வாகனங்கள் இருந்தபோதும், தற்போதைய பொருளாதார நெருக்கடி மற்றும் எரிபொருள் நெருக்கடி நிலையைச் சுட்டிக் காட்டி இந்தக் கட்டாயக் கட்டுப்பாடு ஏற்பாடு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேநேரம் ஆசனத்தில் சரிவதற்குக் கூட வசதியற்ற பஸ்ஸில் பயணிக்குமாறு தங்களைப் பணிக்கும் ஆளுநர், தாம் கொழும்புக்கு அடிக்கடி சென்று வர ஒரே சமயத்தில் ஒரே மாதிரியான இரண்டு வாகனங்களை - அதுவும் டீஸலை ஏப்பம் விடும் சொகுசு வாகனங்களை - பயன்படுத்துவது என்ன நியாயம் என்று சலித்துக்கொண்டார் ஓர் மூத்த அதிகாரி.

அவரே 'தியாகத்தின்' ராஜா. அனால் இந்த சொகுசுகள், வசதிகளை எல்லாவற்றையும் நாட்டுக்காகவோ, பொருளாதார மீட்சிக்காவோ அவர் 'தியாகம்' செய்யவே மாட்டார்.

அவரை நீங்கள் கேட்டால் 'ஊருக்கடி உபதேசம், உனக்கிலையடி' என்று சொல்லுவாரோ, என்னவோ...!

***

ஆளும்தரப்பு எம்.பிகளுக்கும் அவர்களின் துணைவிமாருக்கும் முக்கிய ஒன்று கூடல் இரவு விருந்து ஒன்று இன்று இரவு 7:30 மணிக்கு கொழும்பு பத்திரமுல்ல 'வோட்டர்ஸ் எட்ஜ்' ஹோட்டலில் ஏற்பாடாகி இருக்கின்றது.

முன்னாள் ஜனாதிபதிகள் கோட்டாபய ராஜபக்ஷ, மஹிந்த ராஜபக்ஷ, இப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் நிதியமைச்சர் பஸ்ஸில் ராஜபக்ஷ எல்லோரும் தம்பதி சமேதராக அங்கு வருகை தந்து சந்திக்கின்றனர்.

நாளை மறுதினம் நடக்கப் போகும் வரவு - செலவுத் திட்டத்தின் மூன்றாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்புக்கு முன்னர் ஆளும் தரப்பினரை ஒன்றிணைத்துச் சமாளிக்கும் வேலை போல இது தோன்றுகின்றது. நடக்கட்டும்! நடக்கட்டும்!!

**- மின்னல் -**

## டீசல் விலை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விலையான 420 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும்.

ஏனைய எரிபொருள் விலைகளில் மாற்றம் ஏற்படுத்தப்படவில்லை.

## காஸ் விலை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எரிவாயு சிலிண்டரின் விலை 100 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 1,850 ரூபாவாகும்.

மேலும் 2.3 கிலோ எரிவாயு சிலிண்டரின் விலை 45 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 860 ரூபாவாகும்.

## ஆளுநர் உருவாக்கிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசமைப்புக்கும் சட்டங்களுக்கும் முரணாக தனிநபர் ஒருவர் நியதி சட்டங்களை ஆக்கி அறிவிக்கும் விதத்தில் வடக்கு ஆளுநரால் விடுக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்கள் பெரும் சர்ச்சையைக் கிளப்பியிருந்தமை தெரிந்ததே.

இந்த விடயம் கடந்த வாரம் அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் சுட்டிக்காட்டப்பட்ட போது, அந்த வர்த்தமானி அறிவித்தலை நீக்கும் நடவடிக்கையை நீதி அமைச்சர் மூலம் மேற்கொள்ளலாம் என்று தெரிவித்திருந்தார் ஜனாதிபதி என்பது தெரிந்ததே.

எனினும் நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ அன்றைய தினம் அமைச்சரவைக் கூட்டத்திற்குப் பிரசன்னம் தந்திருக்கவில்லை. வெளிநாட்டில் இருந்தார்.

நேற்று அமைச்சரவை கூடிய போது தேசிய போக்குவரத்துக் கொள்கை திட்டம் ஒன்று குறித்து அங்கு பிரஸ்தாபிக்கப்பட்டது.

சில சேவைகளுக்கான உரிமங்கள் வழங்கும் - மாகாணத்துக்கு பகிரப்பட்ட - உரித்தை தேசிய கொள்கைத் திட்டம் மூலம் மத்திய அரசு பறிக்கும் முயற்சி இது என்று குறிப்பிட்டு, அதற்கு அமைச்சரவையில் கடும் எதிர்ப்பு தெரிவித்து, அந்தத் திட்டத்தை தடுத்து நிறுத்தினார் டக்ளஸ் தேவானந்தா.

அச்சமயம் மாகாண சபையின் அதிகாரத்தை பறிக்கும் விதத்தில் தம்பாட்டில் ஆளுநர் சட்டமாக்கிய விடயத்தையும் அமைச்சர் டக்ளஸ் குறிப்பிட்டார்.

அதை அடுத்துக் குறுக்கிட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அந்த வர்த்தமானி உத்தரவை ரத்து செய்யும் நடவடிக்கையை உரிய முறையில் மேற்கொள்ளுமாறு நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷவைப் பணித்தார் என்று தெரிய வந்தது.

இந்த வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராக வடக்கு மாகாண அவை தலைவர் சி.வீ.கே.சிவஞானத்தை மனுதாரராகக் கொண்டு தடைகேள்ஆணை மனு ஒன்றை ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இவ்வாரம் தாக்கல் செய்ய விருக்கின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## இனப்பிரச்சினையைத் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்காலத்தில் நாட்டை வளமான பாதையில் அழைத்துச் செல்ல உறுதிபூணுவோம். அதற்கு சிங்களத் தலைமைகள் தமது கடந்தகால கசப்பான செயற்பாடுகளையும் அணுகுமுறைகளையும் திருத்திக்கொண்டு இதயசுத்தியுடன் எம்முடன் இணைந்துசெயற்படமுன்வரவேண்டும்.

-இவ்வாறு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் க.பிரேமச்சந்திரன் ஊடக அறிக்கையின் மூலம் அறைகூவல் விடுத்துள்ளார்.

அவரது ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து நாட்டில் பல்வேறுபட்ட குழப்பங்கள் ஏற்படுவதற்கு மாறிமாறி வந்த அரசுகளே காரணமாக இருந்திருக்கின்றன. சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமர் டி.எஸ் சேனநாயக்க மலையக மக்களின் வாக்குரிமையைப் பறிப்பதற்கும் அவர் களை நாடற்றவர்களாக்குவதற்குமான பிரேரணையைக் கொண்டுவந்தார்.

அதற்குப் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் சிங்கள மொழி மட்டுமே அரசகரும மொழியாக இருக்க வேண்டும் என்பதை நிலை நாட்டுவதிலேயே தங்களுக்கிடையில் போட்டிபோட்டுக்கொண்டன. இது ஒருபுறமிருக்க, சுதந்திரமடைந்த நாட்களிலிருந்து, விவசாய அபிவிருத்தி என்ற பெயரில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வெளிமாவட்டங்களிலிருந்து அரச செலவில் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டனர். இதனூடாகத் தமிழ் மக்கள் தமது பிரதேசத்துக்குள்ளேயே சிறுபான்மையினராக மாற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்தக் குடியேற்றங்கள் காரணமாக, புதிய தேர்தல் தொகுதிகள், புதிய சிங்கள கிராமங்கள் உருவாகத் தொடங்கின.

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஒரு பகுதியான அம்பாறை ஒரு சிங்கள தேர்தல் தொகுதியாக மாறியது. அதேபோன்று திருகோணமலையில் சிங்கள மக்கள் குடியேற்றத்துடன் சேருவாவில என்ற தொகுதியும் உருவாக்கப்பட்டது. இப்போது முல்லைத்தீவில் மணலாறு என்ற பிரதேசம் சிங்கள குடியேற்றத்தின் ஊடாக வெலிஓயா என்னும் சிங்கள கிராமமாக மாற்றப்பட்டுள்ளது.

இதேபோன்று வவுனியா மாவட்டத்திலும் கொக்கச்சான்குளம், கொக்குவெளி போன்ற கிராமங்கள் போகஸ்வெள, கொக்கெலிய என்று மாற்றப்பட்டுள்ளன. கடந்த பல வருடங்களாக இத்தகைய குடியேற்றங்கள் ஊடாக பல புதிய சிங்கள கிராமங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

உண்மையாகவே இனங்களுக்கிடையில் சமத்துவம், மொழிகளிடையில் சமத்துவம் என்று பேசக்கூடியவர்கள் இன்னுமொரு இனத்தை, மொழியை அல்லது கலாசாரத்தை அழிக்க முற்பட மாட்டார்கள். ஆனால், இன்றும்கூட தமிழ் மக்கள் தமது மொழிசமத்துவத்துக்காகவும் தமது இருப்பைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவும் தொடர்ந்து போராட வேண்டிய துர்ப்பாக்கிய சூழ்நிலையிலேயே இருக்கின்றனர்.

திட்டமிட்டவகையில் ஓர் இனத்தின் மீது ஒடுக்குமுறைகளையும் கலவரங்களையும் அடக்குமுறைகளையும் வன்முறைகளையும் கட்டவிழ்த்துவிட்டுக் கொண்டும் ஒடுக்கப்பட்ட தமிழ்த் தேசிய இனத்தின் இனப்பரம்பலை மாற்றிய மைப்பதை நோக்கமாகக் கொண்டு, அவர்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த பூமியிலிருந்து அவர்களை விரட்டி அங்கு சிங்கள குடியேற்றங்களை மேற்கொள்கின்றீர்கள்.

இந்த இலட்சணத்தில் நீங்கள் உங்களை நாட்டுப்பற்றாளர்கள் என்றும் மண்ணை நேசிப்பவர்கள் என்றும் படங்காட்டுவதென்பது அருவெறுக்கத்தக்கதாகவே தோன்றுகின்றது.

கடந்த முப்பது வருடகாலதுக்கும் மேலாக, இந்தநாட்டில் ஒருநடைபெற்றது. தமிழ், சிங்கள, முஸ்லிம் இனத்தைச் சார்ந்த பல இலட்சம் மக்கள் கொல்லப்பட்டார்கள். பல்லாயிரக்கணக்கான போராளிகளும் இராணுவத்தினரும் கொல்லப்பட்டார்கள். முடிந்து பதின்மூன்று வருடங்கள் முடிந்துவிட்டது. போர் நடைபெற்ற போதும், அதற்குப் பின்னரும் பல சுற்றுப் பேச்சுகள் நடைபெற்றன. பல அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன, பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஆனால், எதுவுமே நடைமுறைப்படுத்தப்படவில்லை. இப்போது மீண்டும் பேசுவோம் என்கிறார்கள். ஜனாதிபதி, பிரதமர் என பல்வேறுபட்ட தரப்புகளும் பேசுவோம் என்கின்றார்கள்.

இதுவரைகாலமும் பேசி தயாரிக்கப்பட்ட அறிக்கைகளுக்கு என்ன நடந்தது? ஆகவே அரசு பேச்சு என்ற மேசைக்கு வரும் முன்னர், இந்த ஆவணங்கள் அனைத்தையும் பேச்சு மேசைக்குக் கொண்டுவரவேண்டும். அவற்றில் ஒரு பொதுவான உடன்பாவரமுடியுமா என்பதைப் பார்க்கவேண்டும். அதனை விடுத்து, வாருங்கள் நாங்கள் மீண்டும் பேசலாம் என்று கூறுவது நீங்கள் மீண்டும் எங்களை ஏமாற்றப்போகிறீர்களோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

நீங்கள் அனைவருமே நாட்டின் பொருளாதாரம் சீர்கெட்டிருப்பதாகவும் இந்த நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டும் என்றும் கூறிவருகின்றீர்கள். ஆனால், அந்தப் பொருளாதார மேம்பாட்டை வடக்கு - கிழக்குவாழ்

(10ஆம் பக்கம் பார்க்க)



# தோட்ட மக்களைக் காப்பாற்றாத தம்மிக்க நாட்டை எப்படி மீட்பார்?

## ஜீவன் தொண்டமான் காட்டத்துடன் கேள்வி

'ஹொரன பெருந்தோட்ட நிறுவனம் தம்மிக்க பெரேராவுக்கு உரித்தானது, அவர்தான் இலங்கையின் முதல்தரப் பணக்காரர், நாட்டை மீட்கப்போவதாக கூறியே அவர் நாடாளுமன்றம் கூட வந்தார். தோட்ட மக்களை முறையாக வழிநடத்தி அவர்களைப் பாதுகாக்காத தம்மிக்க பெரேரா, நாட்டை எப்படி மீட்பார்.' – என்று இ.தொ.காவின் பொதுச்செயலாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் கேள்வி எழுப்பியுள்ளார்.

அத்துடன், தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடும் தொழிலாளர்களை, சிஜடியினரை களமிறக்கி அச்சுறுத்தும் செயலை தோட்ட நிர்வாகங்கள் உடன் நிறுத்த வேண்டும். இல்லையேல் தக்க பாடம் புகட்டப்படும் எனவும் ஜீவன் தொண்டமான் எச்சரித்தார்.

ஹற்றன்– கொட்டகலை சீ.எல்.எப் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு –

ஹொரன பெருந்தோட்ட நிறுவனம், தொடர்ச்சியாக அத்துமீறல்களில் ஈடுபட்டு வருகின்றது. தொழில் சட்டங்கள் மதிக்கப்படுவதில்லை. தொழிலாளர்கள் மிரட்டப்படுகின்றனர். இதற்கு இடமளிக்கமுடியாது.

மஸ்கெலியா கவரவில தோட்டத்தில் தொழிலாளர்களின் விவசாய நிலங்கள் பறிக்கப்பட்டுள்ளன.

இதற்கு எதிராக தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்கியுள்ளோம். தொழிலாளர்களுக்கு தீர்வு கிடைக்கும்வரை ஒரு கிராம் கொழுந்தைக்கூட வெளியேற்றுவதற்கு இடமளிக்கமாட்டோம்.

கம்பனிகள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டால் அது அவர்களுக்கே பாதிப்பு. தேயிலை ஏலத்துக்கு உரிய நேரத்தில் உற்பத்தியை வழங்காவிட்டால் அவர்கள்தான் சட்ட சிக்கலை சந்திக்க நேரிடும். எனவே, எமது போராட்டம் தொடரும்.

இந்நிலையில் கவரவில தோட்டத்தில் சிஜடியினரை களமிறக்கி, தொழிலாளர்களை தோட்ட நிர்வாகம் மிரட்டுகிறது. தொழிற்சங்க நடவடிக்கையை பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு செல்ல முடியாது.

ஆனாலும் அங்குள்ள தோட்ட அதிகாரி தனது தனிப்பட்ட பலத்தை பிரயோகிக்க முற்படுகின்றார். அதற்கு நாம் அஞ்சப் போபவர்கள் அல்லர். மலையகத்தில் பாடசாலைகளில் ஐஸ்போதைப்பொருள் பயன்படுத்தப்படுகின்றது, இதனைத் தடுப்பதற்கு திராணியற்ற சிஜடிக்கு, தோட்டத்தில் என்ன வேலை?

அதேவேளை, சிவகுமார் என்ற தோட்டத்தொழிலாளி மின்சாரம் தாக்கி, ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றார். அவர் மூன்று பிள்ளைகளின் தந்தை. ஆனால் தோட்ட நிர்வாகம் பொறுப்பு கூறாமல், உயிருக்கு பேரம் பேசுகின்றது. எனவே, ஹொரன பிளான்டேசனுக்கு எதிராக எமது போராட்டம் தொடரும். – என்றார்.



# பிரதான நிலை கடன் வழங்குநர்களுக்கு அழுத்தங்களைப் பிரயோகிக்க முடியாது

## செஹான் சேமசிங்க கூறுகிறார்



கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் பிரதான நிலை கடன் வழங்குநர்களுக்கு அழுத்தம் பிரயோகிக்க முடியாது. சீனாவை தொடர்புபடுத்தி அரசியல் மட்டத்தில் குறிப்பிடப்படும் தவறான கருத்துக்கள் கடன் மறுசீரமைப்பு பேச்சுக்கு தாக்கம் செலுத்தக் கூடாது என்பதில் அவதானமாக உள்ளோம் என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

கடன் மறுசீரமைப்பு தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

சர்வதேச நாணய நிதியத்தின் நிதி ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வதற்கான பேச்சு சாதகமான நிலையில் உள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாத காலத்துக்குள் நிதியுதவியை பெற்றுக் கொள்வதற்கான ஆரம்பக்கட்ட ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும்.

கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் பிரதான நிலை கடன் வழங்குநர்களான இந்தியா, சீனா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுடன் இணக்கமாக செயற்பட வேண்டும். பிரதான நிலை கடன் வழங்குநர்களுக்கு ஒருபோதும் அழுத்தம் பிரயோகிக்க முடியாது.

அரசியல் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு சீனாவைத் தொடர்புபடுத்திக் குறிப்பிடப்படும் ஒருசில விடயங்கள் வெறுக்கத்தக்கவை.

'கோ ஹோம் சைனா' போராட்டத்தை ஆரம்பிப்பதால் சீனாவிற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. இவ்வாறான வெறுக்கத்தக்க பேச்சுக்கள் தேவையற்ற பிரச்சினையைத் தோற்றுவிக்கும்.

அரசியல் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு குறிப்பிடப்படும் கருத்துக்கள் கடன் மறுசீரமைப்பிற்கு தாக்கம் ஏற்படுத்தக் கூடாது என்பதில் தெளிவாக உள்ளோம்.

நாட்டு மக்களுக்கு வழங்கப்படும் நலன்புரி நிவாரணங்களை வெளிப்படைத் தன்மையுடன் சிறந்த முறையில் முன்னெடுக்குமாறு சர்வதேச நாணய நிதியம் ஆலோசனை வழங்கியுள்ளது.

சமுர்த்தி கொடுப்பனவு தொடர்பில் பல முறைப்பாடு காணப்படுகிறது. ஏழ்மை நிலையில் உள்ளவர்களுக்கு இந்த சமுர்த்தி கொடுப்பனவு கிடைக்கப் பெறுகிறதா என்பது தொடர்பில் ஆராய நிதியமைச்சு புள்ளிவிவரவியல் மற்றும் தொகைமதிப்பு திணைக்களத்துடன் ஒன்றிணைந்து விசேட நடவடிக்கையை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளது. சமுர்த்தி பயனாளர்களில் பெரும்பாலானோர் நடுத்தர வருமானம் பெறும் தரப்படுத்தலில் உள்ளார்கள். – என்றார்.

# சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த சிறுவன் மறைந்திருந்து வீடியோ எடுத்த நண்பர்கள் குழாம்!

## 3 பேர் கைது

மட்டக்களப்பு, கொக்குவில் பகுதியில் சிறுமி பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்படுவதை வீடியோ மூலம் பதிவு செய்த குற்றத்தில் மூவர் ஞாயிற்றுக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது –

மட்டக்களப்பு – கொக்குவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள பாடசாலையொன்றில் கல்வி கற்றுவரும் 16 வயது சிறுமியை, அதே வகுப்பில் கற்கும் சிறுவன் 2 மாதங்களுக்கு முன்னர், தனது வீட்டில் யாரும் இல்லாதபோது அழைத்துச் சென்று பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

அப்போது சிறுமி துஷ்பிரயோகம் செய்யப்படும் காட்சியை சிறுவனின் நண்பர்கள் 3 பேர் மறைந்திருந்து வீடியோ எடுத்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து அந்தச் சிறுவனின் நண்பர்கள் சிறுமியை தொடர்பு கொண்டு, வீடியோ பதிவை பற்றி கூறி, தங்களுடனும் உறவுகொள்ள அழைத்து மிரட்டியுள்ளனர்.

தங்கள் விருப்பத்துக்கு இணங்காவிட்டால், வீடியோவை சமூக ஊடகங்களில் பரப்பப்போவதாக சிறுமியை தொடர்ந்து அச்சுறுத்தி வந்துள்ளனர்.

இந்நிலையில் விடயம் சிறுமியின் பெற்றோருக்குத் தெரியவர, பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து துஷ்பிரயோகத்தில் ஈடுபட்ட 16 வயது சிறுவன் மற்றும் அவனது 16 வயது நண்பர்கள் உட்பட 3 பேரை பொலிஸார் கைதுசெய்துள்ளதோடு, சிறுமியை வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

அந்த நண்பர்களில் சம்பவத்தோடு தொடர்புடைய மற்றுமொருவர் தலைமறைவாகி உள்ளார் எனவும், அவரை கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது கைதுசெய்யப்பட்டுள்ள 3 பேரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

# வெளிநாட்டு தொழிலாளர் அனுப்பும் பணத்துக்கு வரி விதிக்கப்படாதாம்!

## மத்தியவங்கி அறிவிப்பு

வெளிநாட்டு பணியாளர்களால் இலங்கை நாட்டுக்கு அனுப்பப்படும் பணத்துக்கு வரி விதிக்கப்படுவதில்லை என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இவ்வாறு அனுப்பப்படும் பணத்துக்கு வரிகள் விதிக்கப்பட்டுள்ளதாக வெளியாகும் தகவல்கள் முற்றிலும் பொய்யானவையென மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இதன்படி, இலங்கைக்கு அனுப்பப்படும் பணத்தை அவர்களது வங்கிக் கணக்குகளில் வெளிநாட்டு நாணயமாக வைத்திருக்கலாம் அல்லது அவர்களின் விருப்பப்படி இலங்கை ரூபாவாக மாற்றிக்கொள்ளலாம் எனவும் மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

# கொழும்பு, புதுக்கடை நீதிமன்ற சான்றுப் பொருள்கள் களஞ்சியசாலையில் 44 பவுண் தங்க நகைகள் திருட்டு!

கொழும்பு, புதுக்கடை நீதிமன்றத்தின் சான்றுப் பொருள்கள் களஞ்சியசாலையில், இரண்டு வழக்குகளுடன் தொடர்புடைய 44 பவுண் தங்க நகைகள் திருடப்பட்டமை தொடர்பில் வாழைத்தோட்டம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

வழக்கு சான்றுப் பொருள்களின் களஞ்சியசாலையில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் வாழைத்தோட்டம் பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பில் உள்ள இரண்டு பொலிஸ் நிலையங்களுடன் தொடர்பான வழக்கு சான்றுப் பொருள்கள் இந்தக் களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ளன எனவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# நஷ்டத்தில் இயங்கும் அரசாங்க நிறுவனங்களின் விவரங்களை நாடாளுமன்றில் சமர்ப்பிக்க திட்டம்!

அரசின் கட்டுப்பாட்டில் உள்ள 420 அரச நிறுவனங்கள் மற்றும் அரசாங்க வியாபார நிறுவனங்கள் நஷ்டத்தில் இயங்குவதாக நிதி அமைச்சு அறிக்கை மூலம் தெரிவித்துள்ளது.

இதன்படி 52 அரச நிறுவனங்களின் வருடாந்த நட்டம் சுமார் 8 ஆயிரத்து 600 கோடி ரூபா என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இது தொடர்பில் முழு விவரங்களை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க எதிர்பார்க்கப்படுவதாகவும் நிதியமைச்சு தெரிவித்துள்ளது. இதேவேளை நஷ்டத்தில் உள்ள நிறுவனங்களை மறுசீரமைக்கவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் சுட்டிகாட்டப்பட்டுள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சட்டங்களில் மாற்றம் அவசியம்

**போதைப்பொருள் பாவனையின் மோசமான விளைவுகளை எதிர்கொண்டு நாடு அதிலிருந்து மீள முடியாமல் திணறிக் கொண்டிருக்கின்றது.**

**போதைப் பொருள் பாவனைப் பரவல் தாராளமாக பாடசாலைகள் வரை ஊடுருவி விட்டது. அதன் மோசமான விளைவுகள் நாட்டுக்கு – அதன் எதிர்காலத்துக்கு – பேராபத்தாக அமையப் போவது திண்ணம்.**

**இந்தச் சமயத்தில் நாட்டின் நீதி அமைச்சர் விஜேயதாஸ ராஜபக்ஷ இந்த விவகாரத்தை ஒட்டி இரண்டு அதிர்ச்சிகரமான தகவல்களை நேற்று நாடாளுமன்றத்தில் வெளியிட்டு இருக்கின்றார்.**

**ஹெரோயின், ஹஸ்கிஸ், ஐஸ், கொக்கெயின் முதலிய 'சிந்தட்டிக்' ரகப் போதைப் பொருள்களின் பாவனை நாட்டுக்குள் பெரிய அளவில் ஊடுருவி, புற்றுநோய் போல பீடித்துப் பரவி வருகின்றமை கண்கூடு.**

**ஏறத்தாழ ஐந்து லட்சம் இளைஞர், யுவதிகள் இந்த ரக போதை பொருள்களுக்கு அடிமையாகி இருக்கின்றார்கள் என்று நீதி அமைச்சர் குறிப்பிடுவது மிக மோசமான – பதைபதைப்பை ஏற்படுத்தும் – தகவலாகும்.**

**நாட்டின் மிக உச்ச வளமான நாளைய இளம் சமூகத்தின் எதிர்காலமும், அதன் மூலம் நாட்டின் எதிர்காலமும், கேள்விக்குள்ளாகி இருக்கின்றமையையே இந்தப் புள்ளிவிவரம் எடுத்தியம்பி நிற்கின்றது.**

**அமைச்சர் கூறும் இன்னொரு தகவல் மேலும் மோசமான அதிர்ச்சியைத் தரும் விடயமாகிறது.**

**பொலிஸாரினாலும், பாதுகாப்புத் தரப்புகளினாலும், போதைப் பொருள் தடுப்பு பிரிவினராலும், கைப்பற்றப்படும் போதைப் பொருள்கள் கூட, மீண்டும் நீதிக்குப் புறம்பான முறையில், நீதித்துறையின் கண்களில் மண்ணைத் தூவி விட்டு, சந்தைக்கு வந்து விற்பனையாகி விடுவதாக அவர் விசனம் தெரிவிக்கின்றார்.**

**பொலிஸாரினாலும் பாதுகாப்புத் தரப்பினராலும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளாலும் கைப்பற்றப்படும் இந்தப் போதைப் பொருள்கள் நீதிமன்றப் பாதுகாப்பில் களஞ்சியங்களில் இருக்கும் போது பல சமயங்களில் 'கோதுமை மா' ஆக மாறி விடுகின்றன, ஒரிஜினல் போதைப்பொருள் மேலதிகாரிகளின் கண்களுக்கு மண்ணை தூவி விட்டு சந்தைக்கு சென்று விற்பனையாகி, சமூகத்தைச் சீரழித்து நிற்கின்றது என்று அவர் விசனத்துடன் சுட்டி காட்டுகின்றார்.**

**ஆகவே இத்தகைய போதைப்பொருள்கள் கைப்பற்றப்படும் போது, உரிய ஆரம்ப விசாரணைகள் முடிவுற்றதும், தேவையான அளவு மாதிரிகள் மட்டும் சேகரித்துப் பாதுகாக்கப்பட எஞ்சியவை நீதிமன்றதலையீட்டுடன் நேரத்துடனேயே எரித்து அழித்து விடப்பட வேண்டும் என்கிறார் நீதி அமைச்சர்.**

**போதைப்பொருள்கள் அச்சுறுத்தலை – சவாலை – சமாளித்து எதிர்கொள்ள சட்டங்கள், ஒழுங்கு விதிகளில் உரிய மாற்றங்கள் அவசியம். அவை விரைந்து செய்யப்பட வேண்டும்.**

# தோல்வியை தாமதப்படுத்தி கொள்வதற்காகவே அரசாங்கம் தேர்தலை பிற்போட முயற்சிக்கிறது!

## விஜித ஹேரத் சாடல்



உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போடும் அரசாங்கத்தின் முயற்சிக்கு தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் செயற்படுகிறாரா என்ற சந்தேகம் தோற்றம் பெற்றுள்ளது.

தோல்வியைத் தாமதப்படுத்திக் கொள்வதற்காகவே அரசாங்கம் தேர்தலை பிற்போட முயற்சிக்கிறது. உள்ளூராட்சி மன்றத்தேர்தல் பிற்போடப்பட்டால் அதன் விளைவை அரசாங்கம் எதிர்கொள்ள நேரிடும் என மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத்தேர்தல் தொடர்பில் வினவியபோதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

சுயாதீன தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு உள்ளூராட்சி மன்றத் தேர்தலை எதிர்வரும் 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் நடத்த ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

முன்னாள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒரு வருட காலத்துக்குப் பிற்போடும் போது, அதற்கான உரிய காரணம் நாடாளுமன்றத்துக்கு அறிவிக்கப்படவில்லை. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அர சாங்கம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போட்ட போது தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு இந்த விடயம் தொடர்பில் கவனம் செலுத் தவில்லை. அரசாங்கத்தின் நோக்கத்துக்கு சார்பாகவே செயற்பட்டது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கும் தனக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது, தேர் தல் தொடர்பில் தேசிய தேர்தல்கள் ஆணைக் குழு கவனம் செலுத்த வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளமை வேடிக்கையாக உள்ளது. உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முறைமை திருத்தம் செய்யப்பட வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நித்திரையில் இருந்து எழுந்ததை போல் குறிப்பிட்டதன் பின்னர் எல்லை நிர்ணயக் குழு நியமிக்கப்பட்டது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தாமல் இருப்பதற்கான தடைகளை சூட்சுமமான முறையில் ஏற்படுத்தி விட்டு தற்போது தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தான் தேர்தல் தொடர்பில் தீர்மானிக்க வேண்டும் என ஜனாதிபதி குறிப்பிடுகின்றமை வேடிக்கையாக உள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போடும் அரசாங்கத்தின் முயற்சிக்கு சார்பாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு செயற்படுகிறது. தோல்வியை பிற்போடுவதற்காக அரசாங்கம் தேர்தலை பிற்போடுகிறது. உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போட்டால் அதன் விளைவை அரசாங்கம் எதிர்கொள்ள நேரிடும். வாக்குரிமைக்காக நீதிமன்றத்தை நாடத் தயாராகவுள்ளோம். – என்றார்.

# கொவிட் காலத்தில் கோடிக்கணக்கில் பணம் சம்பாதித்த இராணுவ அதிகாரி!

## நாடாளுமன்றில் போட்டுடைத்தார் மனுஷ நாணயக்கார



இலங்கையின் முன்னணி இராணுவ அதிகாரிகளில் ஒருவர் கொவிட் கால தனிமைப்படுத்தல் செயற்பாடுகள் மூலம் கோடிக் கணக்கில் பணம் சம்பாதித்துள்ளார் என அமைச்சர் மனுஷ நாணயக்கார குற்றம் சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வரவு – செலவுத் திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அதுகோரளவின் கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும் போது வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டரை வருடங்களாக கொவிட் நோயாளிகளையும் வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு வருகை தருகின்றவர்களையும் தனிமைப்படுத்தி அதனைக் கண்காணிக்கும் பொறுப்பு இராணுவத்துக்கு வழங் கப்பட்டிருந்தது.

இந்நிலையில் வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு வருகை தரும் நபர்கள் ஹோட்டல் அறைகளில் தனிமைப் படுத்தப்பட்ட சந்தர்ப்பங்களில் அவர்கள் ஹோட்டல் அறை மற்றும் உணவு களுக்காக மட்டும் நாளாந்தம் 14 ஆயிரம் ரூபா வரை செலுத்த வேண்டி யேற்பட்டிருந்தது.

அவ்வாறு செலுத்தப்பட்ட தொகையில் ஆயிரம் ரூபா வீதம் நாளாந்தம் இராணுவ அதிகாரி ஒருவரின் மனைவியின் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் மனுஷ நாணயக்கார குற்றம் சாட்டியுள்ளார்.

# அதிவிசேட மதுபானத்தின் விலை குறைக்கப்பட்டது!

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் அதிவிசேடம் மதுபான வகையின் விலை குறைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

மதுவரித் திணைக்கள ஆணையாளர் நாயகம் எம்.ஜே. குணசிறி இந்த விடயம் தொடர்பில் தெற்கு ஊடகமொன்றுக்கு தகவல் வெளியிட்டுள்ளார்.

அதன்படி 750 மில்லி லீற்றர் மதுபான போத்தலின் விலை 80 ரூபாவாலும், 375 மில்லி லீற்றர் மதுபான போத்தலின் விலை 60 ரூபாவாலும், 180 மில்லி லீற்றர் மதுபான போத்தலின் விலை 20 ரூபாவாலும் குறைக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாடு முழுவதிலும் மதுபான விற்பனை வீழ்ச்சியடைந்துள்ள நிலையில் இந்த விலை குறைப்பு அறிவிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# அதானி நிறுவனத்தின் கட்டுப்பாட்டுக்குள் வரவுள்ளன இலங்கையின் துறைமுகங்கள்!

கொழும்பு, டிசெ. 06

இலங்கையின் முக்கிய துறைமுகங்கள் இந்தியாவின் அதானி நிறுவனத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படக்கூடும் என்று தகவல் வெளியாகியுள்ளது.

தற்போதைக்கு இந்தியாவின் கேரளம் மாநிலத்தில் உள்ள விளிஞ்சம் துறைமுக நிர்மாணப் பணிகளை அதானி நிறுவனம் முன்னெடுத்துள்ளது.

அதன் மூலம் மின்சக்தி, எரிவாயு விநியோகம் மட்டுமன்றி 230 கோடியே 50 லட்சம் ரூபா பெறுமதியான துறைமுக வழங்கல் நிலையமொன்றையும் அதானி நிறுவனம் பெற்றுக்கொள்ளவுள்ளது.

எனினும் விளிஞ்சம் துறைமுக நிர்மாணப் பணிகள் காரணமாக தங்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக உள்ளூர் மீனவர்கள் மற்றும் பொதுமக்கள் கடந்த நான்கு மாதங்களாகத் தொடர்ச்சியாகப் போராடி வருகின்றனர்.

அவர்கள் துறைமுக நிர்மாணப் பணிகள் நடைபெறும் இடத்தில் கொட்டில்கள் அமைத்து தங்கள் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

எனினும் அவர்களை அங்கிருந்து அகற்றுவதுடன், எதிர்வரும் நாள்களில் அவ்வாறான எதிர்ப்பு நடவடிக்கை மேற்கொள்வோரை மத்திய ரிசர்வ் படையின் உதவியுடன் அடக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என இந்திய மத்திய அமைச்சர் ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

கேரள விளிஞ்சம் துறைமுக நிர்மாணப் பணிகள் நிறைவடைந்த பின்னர் இலங்கையில் அதானி நிறுவனம் கால் பதிக்கும் என்றும் முக்கிய துறைமுகங்களை தன் வசப்படுத்திக் கொள்ளும் என்றும் எதிர்பார்க்கப்படுவதாக அந்தச் செய்தியில் தொடர்ந்தும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கையின் கிராமம் ஒன்றை தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் நரிகள்!

யக்கல வரெல்லவத்தை பிரதேசத்தில் நரிகளின் அச்சுறுத்தல் காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சினைக்கு அதிகாரிகள் உடனடித் தீர்வு காண வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யக்கல ஹெட்டியதெனிய, மிரிஸ்வத்த, ஹன்சகிரிய முதலான பகுதிகளில் சில மாதங்களாக நரிகளின் நடமட்டாம் காரணமாக மக்களின் அன்றாட நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

அப்பகுதியில் விவசாயம் செய்யப்படாத நெல் வயலை ஒட்டியுள்ள வனச்சூழலில் இருந்து இந்த நரிகள் கிராமத்திற்கு வருகின்றன என மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

குள்ளநரிகளின் பயம் காரணமாக, அப்பகுதி மாணவர்கள் பாடசாலைக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும், அப்பகுதி மக்கள் தினமும் காலையில் பட்டாசுகளைக் கொளுத்தி வேலைக்குச் செல்கின்றனர்.

இந்தப் பிரச்சினைக்கு அதிகாரிகள் உடனடி தீர்வு காண வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கண்ணீர்ப்புகை குண்டுகள் கொள்வனவுக்கு டொலர் இன்மையால் திண்டாடும் பொலிஸ்!

இலங்கை பொலிஸ் திணைக்களம், கண்ணீர்ப் புகைக் குண்டுகளை கொள்வனவு செய்ய முடியாது திண்டாடி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் ஆண்டில் இலங்கை பொலிஸ் திணைக்களம் பயன்படுத்தத் தேவையான கண்ணீர் புகைக் குண்டுகளை இறக்குமதி செய்ய போதியளவு டொலர்கள் கையிருப்பில் இல்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கண்ணீர்புகைக் குண்டு விநியோகஸ்தர்களுக்கு டொலர்களை வழங்க முடியாத நிலை உருவாகியுள்ளது.

கண்ணீர் புகைக் குண்டு உள்ளிட்ட சில பொருள்களைக் கொள்வனவு செய்வதில் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறெனினும், ஏற்கனவே கையிருப்பில் உள்ள கண்ணீர்ப்புகைக் குண்டுகள் உள்ளிட்ட பொருள்களை சிக்கனமாக தொடர்ந்தும் பயன்படுத்திக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# மூன்று மடங்காக அதிகரித்த பாடசாலைக் கட்டணங்கள்!

அடுத்த வருடத்துக்காக பாடசாலை அபிவிருத்தி சங்கத்தால் அறவிடப்படும் கட்டணம் மூன்று மடங்காக அதிகரித்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

கொழும்பில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அந்த சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் இதனை தெரிவித்துள்ளார்.

2022 ஆம் ஆண்டில் பாடசாலைகளுக்காக அரசாங்கத்தால் வழங்கப்படும் கொடுப்பனவு இதுவரை பெற்றுக்கொடுக்கப்படாமை காரணமாகவே பாடசாலை அபிவிருத்தி சங்கத்தால் அறவிடப்படும் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஆசிரியர் பணியில் உள்ள சுமார் 2000 பேர் 60 வயதில் ஓய்வு பெற உள்ள நிலையில், அதற்கு தகுதியானவர்களை நிரப்ப கல்வித்துறை அதிகாரிகளிடம் முறையான திட்டங்கள் இல்லை எனக் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த வெற்றிடங்களுக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமிக்கப்படுபவர்களே நியமிக்கப்படுவதாகவும், சில சமயம் பல்கலைக்கழக பட்டதாரிகளை சேர்த்துக்கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் ஆசிரியர்கள் ஓய்வு பெற்ற பின்னர், பாடசாலைகளை தேர்வு செய்து, தேவையான ஆசிரியர்களை உடனடியாக நியமிக்க செய்ய வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

# சிவனொளிபாதமலை யாத்திரை ஆரம்பம்!

சிவனொளிப்பாதம் அல்லது சிவனடிபாதம் அல்லது சிங்களவர்களால் ஸ்ரீபாத என்றழைக்கப்படும் புனிதத்தல யாத்திரை நாளை (புதன்கிழமை), பூரணைத்தினத்தன்று ஆரம்பமாகிறது.

இது 2023 மே மாதம் பூரணை தினம் வரை நீடிக்கும்.

இதனை முன்னிட்டு, புனிததிருமஞ்சனம், திருவுருவங்கள் மற்றும் சிலைகள் அடங்கிய வாகனப் பேரணி பெல்மடுல்ல கல்பொத்தவல ஸ்ரீபாத ரஜமஹா விஹாரையில் இருந்து இன்று (செவ்வாய்க்கிழமை) புறப்படவுள்ளது.

அன்று மாலை நல்லதண்ணியை வந்தடைந்து, உந்துவப் பூரணைத் தினத்தன்று அதிகாலை அங்கிருந்து ஊர்வலமாக சிவனொளிப்பாத மலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

மேலும் மூன்று ஊர்வலங்கள் எரத்ன, பலபத்கல மற்றும் பொகவந்தலாவ பாதைகள் ஊடாக வந்து ஹற்றன் பாதையில் இணையவுள்ளன.

இந்தநிலையில் யாத்திரையை முன்னிட்டு, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி மாவட்ட செயலாளர்கள் பொலிஸார், பாதுகாப்பு தரப்பினர், அரச நிறுவனங்களின் உதவியுடன் யாத்திரிகர்களுக்கு வசதிகளையும் பாதுகாப்பையும் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# நாட்டில் அத்தியாவசிய பொருள்களின் விலைகள் மீண்டும் அதிகரிக்கப்படா!

## வதந்திகளை நம்பவேண்டாம் என்கிறார் ரஞ்சித் சியாம்பலப்பிட்டிய



நாட்டில் மீண்டும் பொருள்களின் விலை அதிகரிக்கப்படும் எனவும் வரி சீராய்வு திருத்தச்சட்டம் தாக்கல் செய்யப்படும் எனவும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

குறித்த விடயம் தொடர்பாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியாம்பலப்பிட்டிய தகவல் வெளியிட்டுள்ளார்.

நிகழ்வொன்றில் கலந்துகொண்டு பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

நாட்டில் எதிர்வரும் 9 ஆம் திகதி வரி திருத்தச் சட்ட மூலம் சமர்ப்பிக்கப்படமாட்டாது எனவும் அனைத்துப் பொருள்களின் விலைகள் உயரும் என கூறப்படுவது பொய்யான விடயம் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவித்தவை வருமாறு –

வரி திருத்த சட்டம் எதிர்வரும் 9 ஆம் திகதி தாக்கல் செய்யப்படாது. அடுத்த வாரம் 13 ஆம் திகதி அல்லது வேறு ஏதாவது ஒரு நாளில் தாக்கல் செய்யப்படலாம்.

இரண்டாவது விடயம் உத்தேச திருத்தங்கள் எதுவும் இந்த வருட வரவு – செலவுத் திட்ட ஆவணத்துடன் தொடர்புடையவை அல்ல. அவை இடைக்கால வரவு – செலவுத் திட்ட ஆவணத்தில் இருந்த சில விடயங்கள் அல்லது இந்த வரவு – செலவுத் திட்ட ஆவணத்திற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட சில விடயங்கள் ஆகும்.

சில உண்மைகளின் திருத்தம் காரணமாக எல்லா பொருள்களின் விலையும் எந்த நேரத்திலும் அதிகரிக்க எந்த காரணமும் இல்லை.

ஏனெனில் அந்தத் திருத்தங்களில் முன்வைக்கப்பட்டுள்ள பிரச்சினைகள் நேரடி வரிகள் தொடர்பானவை.

மறைமுக வரியாக, அடுக்குமாடி குடியிருப்புகள் போன்ற கட்டடங்களுக்கு வற் வரி மட்டுமே அதிகரிக்கப்படுகிறது. ஒருவர் கட்டடம் கட்டி முதல் முறையாக விற்கும் போதுதான் அது கூட்டுச் சொத்தாக மாறும்.

யாராவது வாங்கி மறுவிற்பனை செய்யும் போது, அந்த வரி பொருந்தாது. இந்த வரித் திருத்தங்கள் பொதுவாக ஜனவரி முதல் திகதியில் இருந்து சட்டங்களாக மாறும். எல்லாப் பொருள்களின் விலையும் உயரும் என்பது நடக்காது என்பதை பொறுப்புடன் சொல்கிறேன்.
– எனத் தெரிவித்துள்ளார்.

# 15 லட்சம் சுற்றுலாப் பயணிகளை அடுத்த ஆண்டு வரவழைக்க திட்டம்

கொழும்பு, டிசெ. 06

அடுத்த ஆண்டில் இலங்கைக்கு குறைந்தபட்சம் 15 லட்சம் சுற்றுலா பயணிகளை வரவழைப்பதற்கான திட்டமொன்றை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது.


சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் காணி அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ இதனை அறிவித்துள்ளார்.

தற்போதைக்கு தென்னிலங்கையின் காலி உள்ளிட்ட பிரதேசங்களில் கூடுதலான சுற்றுலாத் தலங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன.

அங்கு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையும் அதிகரித்துள்ளது. அதற்கு மேலதிகமாக வடக்கில் பாரிய பொழுதுபோக்குப் பூங்கா மற்றும் கிழக்கின் மட்டக்களப்பில் சுற்றுலா நகரம் ஒன்றை அமைக்கவும் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

இவ்வாறான திட்டங்களின் மூலம் அடுத்த ஆண்டில் குறைந்த பட்சம் 15 லட்சம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு வரவழைக்கும் திட்டமொன்றை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது.





# கிளிநொச்சியில்
# ஐஸ்வர்யம்
# பெருவிருந்து மண்டபம்
# Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road,
Kilinochchi



- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL
## BANQUET MEALS HALL





## FULL OPTION

| MAIN DIHES | DESSERT | | BEVERAGES | |
|---|---|---|---|---|
| Vegitable Fried Rice with Panner & Ghee - 900/= | ice Cream Cup | - 60/= | jUICE 200 ml | - 70/= |
| Chiken Fried Rice with Vegetable - 1100/= | Fruit Salad | - 60/= | Milk Drink | - 70/= |
| Kothu Rotty With Vegitable in Indian Style | I ce Cream & Fruit Salad | - 100/= | Cocacola M | - 70/= |
| | Cream Caramel | - 120/= | Pepsi M | - 70/= |
| | | | Swchpees Tin | - 250/= |
| | | | Coca Cola Tin | - 250/= |

SPECIAL MENU PACKAGE

காலைக்கதிர்
Kalaikkathir

# இந்தியாவும் ஆஸியும் விசாகப்பட்டினத்தில் மற்றொரு கூட்டுக் கடற்படை பயிற்சியில்..!



சமீபத்தில் இந்தியாவும் ஆஸ்திரேலியாவும் விசாகப் பட்டினத்தில் மற்றொரு கூட்டு கடற்படை பயிற்சியை நடத்தின. இது ஐந்து மாத கால இடைவெளியில் நான் காவது பயிற்சியாகும். அத்தோடு இது, ஆஸ்திரேலிய முதன்மை திட்டமான இந்தோ - பசுபிக் முயற்சித் திட்டத் தின் ஐபிஇ ஒருங்கிணைந்த பகுதியாகும். ஆஸ்திரேலி யக் குழுவில் இரண்டு றோயல் ஆஸ்திரேலிய கடற் படைக் கப்பல்கள் - HMAS அடிலெய்ட் மற்றும் HMAS அன்சாக் மற்றும் இரண்டு இந்திய கடற்படைக் கப்பல் கள் - ஜலஷ்வா மற்றும் கவரட்டி ஆகியவை அடங்கும்.

Ausindex (ஆஸீன்ன்எக்ஸ்) - இந்தியாவிற்கும் ஆஸ்திரேலியாவிற்கும் இடையிலான இருதரப்பு கடற் படை கடற்படை பயிற்சியானது கூட்டு பாதுகாப்பு ஒத்து ழைப்பை அறிவிப்பதில் குறியீடாக உள்ளது. அதே நேரத்தில் இரு தரப்பிலும் பாதுகாப்பு உள்கட்டமைப்பின் திறனை சோதிக்கிறது. கூட்டுக் கடற்படை பயிற்சியானது, குவாட் குழுவின் பலதரப்பு கடற்படை பயிற்சியான 'மலபார்' மீது கட்டமைக்கும் ஒரு முக்கியமான முயற்சி யாகும். இந்தப் பயிற்சியின் சமீபத்திய செயற்பாடு இந்த ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்றது.

இரு நாடுகளுக்கும் இடையிலான மூலோபாய உறவுகளை வலுப்படுத்துவதில் பாதுகாப்பு ஒத்துழைப்பு குறிப்பிடத்தக்க பங்கை வகிக்கிறது என்பது தெளிவாக இருக்கலாம். எவ்வாறாயினும், ஒட்டுமொத்த கடல்சார்




களத்தில் உள்ள ஒத்துழைப்பு என்பது பாதுகாப்பை விட அதிகமாக உள்ளது. அத்தோடு, இந்த அம்சம் இந்தி யா மற்றும் ஆஸ்திரேலியாவால் உணரப்பட்டுள்ளது.

**கடல்சார் ஒத்துழைப்பை பல்வகைப்படுத்துதல்**

2019 ஆம் ஆண்டு கிழக்காசிய உச்சி மாநாட்டில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியால் அறிவிக்கப்பட்ட இந்தோ - பசிபிக் பெருங்கடல்கள் முன்முயற்சியில் (ஐ.பி.ஓ.ஐ) கடல்சார் களம் ஒரு முக்கிய இடத்தைப் பிடித் துள்ளது. கடல்சார் பாதுகாப்பு மற்றும் கடல் வளங்களை நிலையான முறையில் தட்டியெழுப்புதல் - இந்த முயற் சியை செயல்படுத்துவதற்காக இந்தியா மற்றும் ஆஸ் திரேலியா இடையே கூட்டு ஒத்துழைப்புக்கான அறிவிக் கப்பட்ட நிகழ்ச்சி நிரல் இரு நாடுகளுக்கும் இடையிலான விரிவான பாதுகாப்பு ஒத்துழைப்பை அதிகரிக்கிறது.

கடல்சார் ஒத்துழைப்பைக் கட்டியெழுப்புவதில் இத் தகைய ஆர்வத்திற்கான காரணம், களத்தின் பரந்த ஆற்றலில் உள்ளது மற்றும் வெற்றிகரமான விரிவான கூட்டாண்மையை உருவாக்க இந்தியாவும் ஆஸ்திரேலி யாவும் இந்த வியத்தில் நெருக்கமான உறவுகளில் கவனம் செலுத்துவது கட்டாயமாகும். 2020 இல் நடந்த இருதரப்பு உச்சிமாநாட்டின் போது, இந்தியா மற்றும் ஆஸ்திரேலியாவின் அரசாங்கங்கள் கடல்சார் ஒத்து ழைப்பிற்கான தங்கள் பகிரப்பட்ட பார்வைக்கான கூட்டுப் பிரகடனத்தை அறிவித்தபோது, இந்த பொதுவான நிகழ்ச்சி நிரல் மேலும் உணரப்பட்டது. கடல்சார் களத்தில் சாத்தியமான வாய்ப்புகளுக்கான திறனை வளர்ப்பதில் மட்டும் முதன்மையாக கவனம் செலுத்துகிறது, ஆனால் அத்தோடு இந்த பகிரப்பட்ட இலக்கில் வரும் எந்த சவால் களையும் சமாளிப்பதும் முக்கியமாகும்

**கூட்டுப் பிரகடனம்**

இந்த திருப்புமுனை பிரகடனத்தின் முக்கிய கோட் பாடுகள், கடல்சார் பாதுகாப்பு களத்தை கட்டியெழுப்பு வதன் மூலம் இந்தோ - பசுபிக் பகுதியில் அமைதி, பாது காப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை மேம்படுத்துவதில் நாடுகளின் அர்ப்பணிப்புகளை குறிப்பாக வலியுறுத்தி யது. இந்தியாவும் ஆஸ்திரேலியாவும் பிராந்தியத்தில் மிக முக்கியமான ஜனநாயக நாடுகளாகும். எனவே அமைதியான இந்தோ - பசுபிக் என்ற பொதுவான இலக்கை அடைவதில் அவர்களின் நிலை மிகவும் மூலோபாயமாகிறது.

இந்தக் கூட்டுப் பிரகடனத்தின் ஒரு பகுதியாக, இரு நாடுகளும் கடல்சார் பாதுகாப்புக் களத்தில் விதி அடிப் படையிலான ஒழுங்கைப் பேணுவதற்கான தங்கள் உறுதிப்பாட்டை அதிகாரபூர்வமாக அறிவித்தன. இந்த காரணி அடிப்படையில் இந்தியாவும் ஆஸ்திரேலியாவும் கூட்டாக கடல்சார் துறையில் செயல்பாடுகளை ஒழுங்கு படுத்தும் சர்வதேச மரபுகளை, குறிப்பாக ஐக்கிய நாடு களின் கடல் சட்டம் தொடர்பான மாநாட்டு (UNCLOS) ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடிக்க ஒப்புக்கொள்கின் றன.

கடத்தல், தனியுரிமை, ஆயுதங்கள் மற்றும் பிற தீங்கு விளைவிக்கும் பொருடகள் கடத்தல், பயங்கர வாதம், சட்டவிரோத இடம்பெயர்வு மற்றும் ஒழுங்கற்ற மீன்பிடித்தல் தொடர்பான நடவடிக்கைகளுக்கு எதிராக பாதுகாப்பை உறுதிசெய்ய முக்கியமான பங்குதாரர்கள் ஒன்றிணைந்தால் மட்டுமே இந்தோ - பசுபிக் பாதுகாப்பு உறுதி செய்யப்படும். இந்த நடவடிக்கைகளை தடை செய்வதற்கான ஒரு விரிவான ஒத்துழைப்பு பொறிமுறை யானது வாய்ப்புகளைத் தட்டியெழுப்புவதற்கான திற னையும் சேர்க்கும்.

இந்த கூட்டுப் பிரகடனத்தின் குறிப்பிடத்தக்க அம்சம், ஆசியான் போன்ற முக்கிய பிராந்திய தரப்புகளுடன் ஈடுபடுவதன் மூலம் பலதரப்பு இராஜதந்திரத்தில் ஈடுப டுவதன் வாயிலாக தங்கள் செல்வாக்கின் பகுதிகளை விரிவுபடுத்துவதற்கான நாடுகளால் பகிர்ந்து கொள்ளப் பட்ட உறுதிப்பாடாகும். இது ஒரு நிலையான பாதுகாப்பு உள்கட்டமைப்பை உருவாக்க பிராந்தியத்தில் 'கடற் படை - கடற்படை' ஒத்துழைப்பை வளர்ப்பதை உறுதி செய்யும்.

இந்தோ - பசுபிக் பெருங்கடல் முன்முயற்சிக்கான (ஐ.பி.ஓ.ஐ.) அர்ப்பணிப்பு திரும்பவும் கூட்டுப் பிரகடனத் தில் மீள வலியுறுத்தப்பட்டது. இரு தரப்பினரும் ஒன் றிணைந்து, முன்முயற்சியின் விதிமுறைகளை உரு வாக்குவதற்கு ஒத்துழைப்பை உறுதிசெய்தனர்.

**இந்தோ பசுபிக் பெருங்கடல் முன்முயற்சி**

இந்தோ - பசுபிக் பெருங்கடல் முன்முயற்சியின் கட்டமைப்பிற்குள் ஆஸ்திரேலியா - இந்தியா கூட்டு



என்பது இரு நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பைப் பன்முகப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட உறுதியான நடவடிக்கைகளின் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இந்தோ பசுபிக் பெருங்கடல் முன் முயற்சியானது, இந்த விடயத்தில் கடல் சார் சூழலியல், பாதுகாப்பு, வளங்கள், வர்த்தகம் மற்றும் கடல்வழிப் போக்கு வரத்தின் இணைப்பு மற்றும் ஆராய்ச்சி திறன் மற்றும் வளப் பகிர்வு உள்ளிட்ட கடல்சார் களத்தின் பல்வேறு துறைக ளில் பிராந்தியத்தில் உள்ள நாடுகளி டையே பலதரப்பு ஒத்துழைப்பை உரு வாக்குவதை நோக்கமாகக் கொண் டுள்ளது.



இந்த ஒத்துழைப்பைக் கட்டியெழுப்புவதற்கான மிக முக்கியமான காரணிகளில் ஒன்று, இந்த முயற்சியின் ஒரு பகுதியாக திட்டங்களுக்கு ஆதரவளிப்பதற்கான மா னியங்கள் மற்றும் நிதியளிப்பாகும். ஆஸ்திரேலியா - இந்தியா - பசுபிக் பெருங்கடல்கள் முன்முயற்சி கூட் டாண்மை (AIIPOIP) இது சம்பந்தமாக மானியங்களை வழங்குகிறது. இது இரு தரப்பிலும் நாடு மற்றும் அரசு அல்லாத தரப்புகளுக்கு இடையே நிலையான ஒத்து ழைப்பை உறுதி செய்கிறது. கூட்டாண்மைகளை உரு வாக்குதல் மற்றும் குறிப்பாக கடல்சார் சூழலியல் களத் துடன் தொடர்புடைய யோசனைகளை உருவாக்குதல் ஆகியவற்றின் நோக்கத்தை முன்னெடுப்பதே இதன் யோசனையாகும்.

கடல்சார் ஒத்துழைப்பின் பாதுகாப்பு மற்றும் மூலோ பாய அம்சங்களில் கவனம் செலுத்தும் அனைத்து சிரத்தைக்கும் மத்தியில், இந்த பகுதியில் ஆழமான ஈடுபாட்டிற்கு உகந்த ஒரு நிலையான சூழலியல் கட்ட மைப்பை உருவாக்குவதற்கு குறிப்பிடத்தக்க அவதானம் செலுத்தப்பட வேண்டும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். முக்கியமான கடல் வளங்களைப் பிரித் தெடுப்பது தொடர்பான அனைத்து நடவடிக்கைகளி லும், கடல் சூழலியலை மேம்படுத்துவதில் முதலீடு செய் வது மிகவும் முக்கியமானதாகிறது. பிளாஸ்டிக் குவிப் பைக் குறைப்பது மற்றும் ஆழ்கடலில் இருந்து வெளி யேறும் பிளாஸ்டிக் கழிவுகளை சிறந்த முறையில் நிர்வகிப்பதற்கான கட்டமைப்புத் தொழில்நுட்பங்கள் குறித்தும் கவனம் செலுத்தப்படும்.

கடற்படைப் பயிற்சிகள் மற்றும் இராஜதந்திர கலந்து ரையாடல்களுக்கு அப்பால் கடல்சார் துறையில் ஒத்து ழைப்பில் ஒரு பெரிய நோக்கம் உள்ளது என்று கூறுவது உண்மையில் மிகைப்படுத்தலாக இருக்காது. ஒத்து ழைப்பின் அடிப்படையில் கடல் நீர் நமக்கு பல வாய்ப் புகளை வழங்குகிறது என்பதைப் புரிந்துகொள்வது மிகவும் பொருத்தமானது. ஆனால் அது நிலையான தாக செய்யப்பட வேண்டும். இதனால்தான் கடல்சார் சூழலியல் இது சம்பந்தமாக ஒத்துழைக்கும் மற்ற பகுதி களை விட முதன்மை பெறுகிறது.

இந்தியாவும் ஆஸ்திரேலியாவும் ஒரு பாதுகாப்பான மற்றும் மிகவும் பந்தோபஸ்தான இந்தோ - பசுபிக் பிராந்தியத்திற்கு அடிப்படையில் பங்களிக்கும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கான முதலீட்டிற்கான வாய்ப்பு களை உருவாக்குவதன் மூலம் இந்த வியத்தில் குறிப் பிடத்தக்க தலைமைப் பாத்திரத்தை வகிக்க முடியும்.

- அகூஷி சர்மா -

காலைக்கதிர் Kalaikkathir

**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.**

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## கேட்பவர் கேணையர் என்றால்....!



- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் - 202**

சட்டத்தரணியான என் அனுபவத்தில் ஒரு வழக்கினுடைய வெற்றி சாட்சிகளில் இல்லை.... அது சாட்சிகளை உருவாக்குவதிலும், அவர்களைத் தயார் படுத்தி வாதாடுவதிலும்தான் இருக்கிறது என்பதை அறிவேன்.

அப்படி சாட்சிகளை வைத்துக்கொண்டு தாங்கள் எதையும் செய்யலாம், ஏனெனில் தாங்கள்தான் கட்சித் தலைவர்கள், கொள்கைகள் எல்லாம் எங்களைப் பத்தரை மாற்றுத் தங்கங்களாகப் பொது வழியில் காட்டத்தான், எங்களுக்கென்று வரும் போது கொள்கைகளை வளைத்து நியாயப்படுத்திக் கொள்ளலாம், ஊருக்கு சேவை செய்ய புறப்பட்டாலும் அதில் 'சம்திங்' இல்லாமல் எப்படி? – என்கின்ற மனிதர்கள், அதுவும் தமிழ் மக்களிடையே என்னை சூழ்ந்திருப்பதால் அவர்கள் எனது மனதைப் படாத பாடு படுத்துகிறார்கள். அவர்கள் தங்களது செயல்பாடுகளினால், அவற்றின் பெறுபேறுகளினால் சந்தோம் காணும் போது என் மனது கஷ்டப்படுகிறது. தமிழ் மக்களது நிலையிலிருந்து இவற்றை அனுபவிக்கும் போது, நான் என்னுடைய சந்தோம் இவை பற்றிய சில வரலாறுகளையோ ஆய்வுகளையோ எழுதினேன் என்ற குறுகிய அளவில் திருத்திப்பட்டுக் கொள்ளும் சுயநலமான ஆன்மாவாக என்னால் இருக்க முடியவில்லை.

தமிழ் மக்கள் தங்களது இதுவரை கால அரசியலை சுய விமர்சனங்களில் மீளாய்வு செய்து, அதிலிருந்து பாதைகள் வகுக்க வேண்டும் என அடிக்கடி நான் குறிப்பிட்டமைக்கு – பதிந்தமைக்கு – இப்படிப்பட்ட மனிதர்களும் அவர்களால் நடத்தப்பட்ட அரசியலும் முக்கிய காரணம்.

நான் எழுத்தாளன் அல்லன். நான் குறிப்பிடுபவை அவற்றின் ஆரம்பமே.

இவை தமிழ் மக்கள் முன் வைக்கப்பட வேண்டும் என்பதில் யார் யாரையும், எந்தப் பகுதியையும் திருப்திப்படுத்த நான் விரும்பவில்லை. அவர்களோ, அவர்கள் நடத்திய அரசியலின் தாக்கங்களோ தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தியவற்றைரத்தான் நான் குறித்தேன். அதேசமயம் தமிழ் மக்களின் சமூக அங்கத்தினரில் பலரே சுயநலவாதிகள். அவை யாவுமே ஒன்று சேர்ந்துதான் அவர்களை அவர்களது தற்சமய படுகுழிக்குள் தள்ளியுள்ளது.

மார்ச் 2009 இல், மக்களை பயங்கரவாதத்திலிருந்து மீட்டெடுப்பது என்ற கோத்தின் புதுப்பொலிவில், கூட்டமைப்புக்கு பேச்சுக்கு சர்வதேசத்தின் அழுத்தத்தில் மஹிந்தா அழைப்பு விட, சம்பந்தன் 'எடுத்த காரியம் முடிந்த பின் பேசலாம்' என்று குறிப்பிட்டு இன்று 13 ஆண்டுகள் முடிந்து விட்டன.

தமிழ் மக்களது அரசியலில் எந்த ஓர் அடி கூட முன்னேறவில்லை. தமிழ் மக்களின் பலமாக இருந்த விடுதலைப் புலிகளைக் காவு கொடுத்ததைத் தவிர.

இந்தியாவுடன் முரண்பாடுகளைத் தேடி, பின் இந்தியப் படைகளுடன் பிரபாகரன் போரை நடத்தியது வரலாறு சுட்டிக் காட்டுகின்ற யதார்த்தமற்ற மாபெரும் தவறு. அதனை தமிழ் மக்கள் ஒன்றிணைந்து மாற்றிக் கொள்ளவில்லை.

அதேபோல் விடுதலை புலிகளையும் அழியக் கொடுத்து இந்த 13 வருடங்களும் எந்தவித முன்னேற்றங்களும் காணாமல், கூட்டமைப்பின் பங்காளி கட்சி தலைவர் சித்தார்த்தன் 'ஏக்கராஜ்ஜிய' அடிப்படையில் அரசமைப்பின் வழிநடத்தல் குழுவின் உபகுழுவின் தலைவராக அதற்கு அனுசரணை தந்து, பௌத்த மதத்திற்கு முன்னுரிமை அந்த யாப்பில் கொடுப்பதற்கு சம்பந்தன் இணங்கிக் கையெழுத்து இட்டு இப்பொழுது எதுவுமே ஆகாத நிலையில், மாவட்ட அபிவிருத்தி சபைகளை சிங்கள தரப்புகள் பேச்சு எடுக்கும் போது (அதுவும் இந்தியா தொடர்ந்து ஜெனீவா மனித உரிமை மன்றத்தின் தீர்மானங்களில் கூட 13ஆம் திருத்தத்தை உள்ளடக்கிய பின்னரும்) இந்த நிலைகள் தொடர்ந்ததால், 'வடக்கு, கிழக்கில் தமிழ்ப் பேசும் மக்கள் அவர்களது அடையாளத்தையும் சுய கௌரவத்தையும்



சம்பந்தன்

பேணிப் பாதுகாக்க முடியாது, இதனை சர்வதேசம் அனுமதிக்க கூடாது' என்று சம்பந்தன் தமது இயலாத தன்மைகளில் அங்கலாய்க்கின்றார்.

'பொங்குதமிழர்க்கு இன்னல் விளைத்தால்
சங்காரம் நிசமெனச் சங்கே முழங்கு!'

எனப் பாரதிதாசன் பாடினான்.

எல்லாவற்றையும் கணக்கு பாராது, 2009 இல் நடந்த சங்காரத்தின் போது கூட யார் வந்தார்கள்? எல்லா சர்வதேச நாடுகளும் அக்கறையாக அழுத்தங்களும் அனுதாபங்களும் தந்தனவே ஒழிய, அண்டை நாட்டின் தமிழ் உறவுகள் கூட கடல் கடக்க முடியவில்லை. நாடுகளின் தெளிவான பார்வைகளுக்கு சர்வதேச ரீதியில் ஓர் எல்லைக்கோடு உண்டு. அந்த எல்லையை மீறி முற்று முழுக்க ஸ்ரீலங்காவில் உள்ளிட்டு தலையிடுவது புவியியல் அரசு சார் நிலைகளில் அந்த நாடுகளுக்கு சாதகமாக வேண்டும். அதுவும் கூட, பிராந்திய வல்லரசான இந்தியாவின் அனுசரணையுடனேயே நடக்கலாம்.

அந்தச் சங்காரத்தை ஏன் நடத்த விட்டார்கள்? இந்த 13 ஆண்டுகளில் நடந்த அரசியல் தானா இன்றைக்குள்ள யதார்த்த நிலைகளைத் தோற்றுவிக்கிறது? அன்றில் இதுவரை தமிழ் மக்களை வழிநடத்திய தலைவர்களின் யோக்கியத்தை அறிந்துதானா சர்வதேச அபிப்பிராயங்களையும் கணக்கெடுத்து இன்றும் சிங்கள தலைமைகள் மாவட்ட அபிவிருத்தி சபைகளை முன்னெடுக்கின்றன? தனது கண்களை மூடி சம்பந்தன், இந்தியாவையும் பாராது, சிங்கள தலைமைகள் தனக்கு இணக்கமாக 13ஆம் திருத்தத்திற்கும் மேல் சமஷ்டி தருவார்கள் என்று கற்பனையில் மிதந்து, இன்று திருகோணமலை அல்ல, திருக்கோணேஸ்வரத்துக்கும் தனது அந்திம காலங்களில் ஆப்பு வைத்து விட்டு, நிம்மதியாக அரசியலில் ஓய்வு பெற்று விடுவாரா?

இவை நாட்டின் நடப்பு அரசியல்கள்.

எங்கே போக வேண்டும் என சூழ்நிலையை யதார்த்த பூர்வமான அணுகு முறையில் அனைவரும் ஒன்று சேர்ந்து அரசியல் பொறிமுறை ஒன்றை அமைப்பதற்கான வழிமுறைகளுக்காக தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் பொது நிலை கூட்டம் ஒன்றை ஒழுங்கு செய்துள்ளார் என்ற செய்தி ஊக்கம் தரலாம். இப்படியான அழைப்புகளை தமிழர் தரப்பு கட்சி அரசியலை – தேர்தல் அரசியலை – ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு, 'துரோகி', 'தியாகி' என்ற குறிசுடுதல்களை ஒரு புறம் தள்ளி வைத்துவிட்டு, ஒட்டுமொத்த தமிழர்களின் நலன்களுக்காக இந்தச் சந்தர்ப்பத்திலாவது இலங்கை அரசாங்கங்கள் தமிழ் மக்களை ஏமாற்ற இடம் அழியாது, தந்திரோபாயமாகக் கையாள வேண்டும்.

அதற்கு முதலில் தேவை தமிழ் மக்களிடையே ஐக்கியம் என அரசியல் ஆய்வாளர் தம்பியப்பா கோபாலகிருஷ்ணன் 'அரங்கம்' சஞ்சிகையூடாக அறைகூவல் விடுத்துள்ளார்.

ஆனால் அரசியல் பொறிமுறைகளுக்கான ஐக்கியம், சர்வதேச புலம் பெயர் அமைப்புகளும் அவற்றுக்கு தொடர்ந்து உந்து சக்தியாக உள்ள விடுதலைப் புலிகளது நிலைப்பாடுகளும் ஒரு புள்ளியில் சந்தித்தால் தான் சர்வதேச சமூகமும் ஒத்தாசை புரியும்.

அப்படியான யதார்த்த நிலைகளுக்கு புலம் பெயர் சமூகங்கள் தங்களை ஈடுபடுத்தாமல் தொடர்ந்தும் தனிமனித விமர்சனங்களிலும் அவை இணைந்த முரண்பாடுகளிலும் முனைப்பெடுப்பதைத் தான் ஊடகங்கள் தெளிவுப்படுத்துகின்றன.

கடந்த ஞாயிறு சுவிஸில் நடந்த மாவீரர் தினத்தில் "கேட்பவன் கேணையன் என்றால் நம் தலைவர் ஆபிரிக்காவில்தான் இருக்கிறார் என இன்னும் சொல்வார்கள்" என்று அங்கு குழுமியிருந்த மக்களுக்கு சுவிஸ் விடுதலை



மஹிந்த ராஜபக்ஷ

புலிகளின் ஏக தலைவர் ரகுபதி கூறிய தகவல்களை அடுத்து பதியப்பட்ட வாசகர் குறிப்பில் இருந்த வாசகங்கள், அவர் முன்னைய பொறுப்பாளர் குலம் அவர்களை விரோத மனப்பான்மையுடன் சாடியிருந்தார் எனவும், அந்த



சிவகரன்

உண்மை மண்டபத்தில் இருந்த யாபேருக்கும் தெரியும் என்றும் கூறப்பட்டது. அனைத்துக்கும் ஆதாரம் உண்டு, நிரூபிக்க முடியும், நேரில் வந்தால் தாங்கள் தங்கள் பகுதியை அழைத்து வருவோம் என்ற மேற்பதிவுகளும் இருந்தன.

இவையெல்லாம் ஐக்கியத்தை நோக்கிய முறைகளின் மார்க்கமாக தெரியவில்லை.

2009 ஆம் ஆண்டு வரை விடுதலை புலிகளின் மாத ஊதியத்தில் வாழ்க்கை நடத்தியவராகப் பேசப்படும் அன்ரன் சூசைப்பிள்ளை பொன்ராசா அப்பொழுது தலைவரையும் இயக்கத்தையும் தூக்கி வைத்துக் கொண்டாடியவர். இப்பொழுது தலைவரை அவமதித்து, புத்தகத்துக்கு முகவுரை எழுதியிருந்தார் என்பதும், ரகுபதி அது பற்றி விட்ட அறிக்கையைத் தனக்கு சாதகமாக அன்ரன் பயன்படுத்தினார் போன்ற குற்ற அறைகூவல்கள் உள்ளன. இவை யாவும் எதற்காக?

எனது மக்களின் விடுதலைக்காக என்ற வரலாற்று நூலை 'நீதியான சமாதானத்திற்கும் ஜனநாயகத்துக்குமான நடுவத்தினால்' வெளியிடப்பட்டதில், பதிப்புரை, வரலாற்று குறிப்பு, கரம் கூப்பிய இறைஞ்சல் போன்ற மூன்று பகுதிகளை பொன்ராசா அன்ரன் வரைந்திருந்தார். அதை ஒட்டிய தர்க்கம் இப்படி வளர்ந்தது. 'தங்க ஊசி என்பதால் கண்ணில் குற்றிக் கொள்ளலாமா?

அண்மையில் ஒரு பதிரி குழுமம் ஒன்றில், "தமிழீழ விடுதலைப் புலிகளால் 1993 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட நூலின் பெயரில் தற்போது தனிநபர் ஒருவர் (அன்ரன்) அந்தப் பெயரை தனதாக்கி, 'எனது மக்களின் விடுதலைக்காக' என்ற பெயருடன் ஒரு நூல் அறிமுக விழா என விளம்பரம் பார்த்தேன். அதில் வரலாற்று ஆவணத் தொகுப்பு எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. முதலில் அந்த நூலை தொகுத்தவர் வரலாற்றைப் படிக்காமல் வரலாற்றைப் படைக்க முடியாது என்ற சிந்தனையை உணர வேண்டும். வரலாற்றை நாம் அடுத்த சந்ததியினருக்கு கடத்த வேண்டிய நிலையில் உள்ளோம் என்பதில் யாருக்கும் இங்கு மாற்றுக் கருத்துக் கிடையாது. அந்த வரலாற்றைச் சரியான முறையில் – எவ்வித திணிப்புமின்றி – கடத்த வேண்டும்."

தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் நிலையில் அவர்களுக்குத் தேவையான முதல் உதவிக்கான வாகனங்கள் அவர்களில் இருந்து எவ்வளவு தொலைவில் நிற்கின்றன என்பதை இவை உணர்த்துகின்றன.

(வளரும்...)

## இனப்பிரச்சினையைத் .......

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)
மக்கள் செய்வதற்கு அதற்கான அதிகாரங்களைக் கொடுப்பதற்கு நீங்கள் தயாராக இல்லை.

நாடு திவாலாகிப்போய், வாங்கிய கடனை கட்டமுடியாமல், சோற்றுக்கு வழியில்லாமல், மூன்று நேர உணவு ஒருவேளை உணவாக மாறியுள்ள சூழ் நிலையிலும் பொருளாதார அபிவிருத் தியை முன்னெடுத்துச் செல்வதற்கு தமிழ் மக்களுக்கான அதிகாரங்களை வழங்கு வதில் நீங்கள் பின்னிற்கவே செய்கிறீர்கள். உங்களது இத்தகைய நடவடிக்கைகள் காரணமாகவே தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் தலைவர் சம்பந்தனும் இனப் பிரச்சினைக்கான தீர்வு ஒரு கானல்நீரா கத் தெரிவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த் தேசிய இனத்தைச் சேர்ந்த ஒரு சாதாரண குடிமகன்கூட சிங்கள தலைமைகள் எதன் மீதும் நம்பிக்கை வைக்கமுடியாது என்று சொல்லும் அளவுக்கு உங்கள் மீது அவநம்பிக் கையை ஏற்படுத்தியுள்ளீர்கள்.

நிலைமை இவ்வாறிருக்க, தமிழ்த் தரப்புகள் ஒற்றுமையாக வரவேண்டும் என்றும், அனைத்தையும் கொடுப்பதற் குத் தயாராக இருப்பது போலவும், மாறி மாறி ஊடகங்களுக்குச் செய்திகள் கொடுப் பது அபத்தமானதாகவும் போலித்தன மானதாகவும் தோன்றுகின்றது.

அதுமாத்திரமல்லாமல், உங்களுக்குச் சிலதேவைகள் வருகின்ற போது இனப் பிரச்சினை தொடர்பான பேச்சுகளை நடத்துவது போன்று படங்காட்டுவதும் பின்னர் அவற்றைக் கிடப்பில் போடுவதும் நாங்கள் தொடர்ந்து பார்த்துவரும் ஒரு நெடுந்தொடராகவே அமைந்திருக்கின் றது (மெகாசீரியல்).

நாடு பொருளாதார ரீதியில் மிகவும் இக்கட்டான சூழலில் இருக்கின்ற வேளை யிலாவது நீங்கள் நிலைமையின் ஆபத்தை உணர்ந்து பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலான ஒரு தீர்வுத்திட் டத்தை நோக்கிநடைபோட இப்போதாவது சிங்களத் தலைமைகள் முன்வரவேண் டும் - என்றுள்ளது.

## ராஜித, வெல்கம, .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க மின்சக்தி அமைச் சராகப் பதவிப் பிரமாணம் செய்து கொள் வதற்கு அதிக வாய்ப்புக்கள் உள்ளன என்றும் அந்தத் தரப்புகள் தெரிவிக்கின் றன.

## குமார் வெல்கம

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நிலையத்தில் உள்ள மருத்துவ நிலை யத்தில் அடிப்படை சிகிச்சைகளை வழங் கியபின்னர் விமானநிலைய அம்புலன்ஸ் மூலம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். அவர் தற்போது கொழும் பில் உள்ள தனியார் வைத்திசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

## மட்டக்களப்பில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மக்கள் சந்திப்பு காரியாலயத்தில் அமைக் கப்பட்டிருந்த பெயர் பலகையை இனம் தெரியாத விசமிகளால் நேற்று முன்தி னம் ஞாயிற்றுக்கிழமை இரவு சேதமாக் கப்பட்டுள்ளது.

அத்துடன், அங்கு பொருத்தப்பட்டிருந்த 'சோலார்' மின்விளக்கும் திருடிச் செல்லப் பட்டுள்ளது. அந்தக் காரியாலயத்தில் கடந்த 2 வருடங்களாக மக்கள் சந்திப்புக் கள் இடம்பெற்று வருகின்றன.

இந்தநிலையில் இதுகுறித்து கருத்து வெளியிடும் போதே இரா.சாணக்கியன் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பியுள் ளார்.

மக்கள் தற்போது ஓரளவிற்கேனும் நிம்மதியாக வாழ்ந்து வருகின்ற நிலை யில், மட்டக்களப்பில் மீண்டும் ஒட்டுக் குழுக்களின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளனவா என்ற சந்தேகம் ஏற்பட்டுள் ளது. என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஊழல் மோசடிகளுக்கு எதிராக தான் தொடர்ச்சியாக குரல் கொடுத்து வரும் நிலையில், தன்னை அச்சுறுத்தும் வகை யிலேயே இந்த செயற்பாடு அமைந்துள்ள தாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## பாடசாலை கன்ரீனில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கம்பஹா, மல்வத்துஹிரிபிட்டிய பிரதேசத் தில் உள்ள பாடசாலை ஒன்றில் இந்தப் போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள் ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரி வித்தார்.

இந்த சம்பவம் தொடர்பாக சிற்றுண்டி சாலையை நடத்தி வந்த பெண்ணை பொலிஸார் கைது செய்தனர்.

## ஓமானில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சமகி வனிதா பலவேகய அமைப்பின் ஏற் பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக் கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள், இலங்கைப் பெண்கள் பாலியல் அடிமை களா?, அனைத்தையும் விற்று ஏப்பமிட்டு இப்போது எமது பெண்களின் மானத்தை யும் விற்கும் மானம் கெட்ட அரசு, ஓமா னில் பாலியல் துன்புறுதலுக்கு உள்ளாக் கப்பட்டுள்ள எமது பெண்களைக் காப் பாற்று போன்ற வாசகங்களைத் தாங்கிய பதாதைகளை ஏந்தியிருந்தனர்.

இலுப்பையடிச் சந்தியிலிருந்து நடை பயணமாகச் சென்ற போராட்டக்காரர்கள், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் வவுனியா காரியால- யத்தை முற்றுகையிட்டதுடன் பணியகத் தின் பொறுப்பதிகாரியிடம் மகஜரும் கையளித்தனர்.

## பாதுகாப்பற்ற ரயில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மெனிக்பாம் பகுதியில் அமைந்துள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ரயில் விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்தி ருந்த நிலையிலே இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

குறித்த கடவையில் ஐந்து விபத்துச் சம்பவங்கள் இடம்பெற்றிருந்ததுடன் அண்மையில் பஸ் ஒன்றும் விபத்துக்குள் ளாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தக் கிராமத்தில் 1500 குடும்பங்கள் வசித்து வருகின்றன எனவும், குறித்த கடவையினூடாகப் பாதுகாப்பற்ற போக் குவரத்தைத் தாம் மேற்கொண்டு வரு கின்றனர் எனவும், அத்தோடு ரயில் சீரான நேரத்தில் வருகை தராததால் எந்த நேரத்தில் ரயில் வரும் என்று தெரியாத நிலையிலே குறித்த பாதையினூடாகப் பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள் ளது எனவும் போராட்டக்காரர்கள் தெரி வித்தனர்.

ரயில் கடவையில் பணியாற்றும் பணியாளர்களுக்கு 7 ஆயிரத்து 500 ரூபா மாத்திரமே ஊதியமாக வழங்கப்படு வதால் யாரும் குறித்த பணிக்குச் செல்ல விரும்புவதில்லைஎன்றும்போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் சுட்டிக்காட்டினர்.

போராட்ட இடத்துக்கு வருகை தந்த பறயனாளங்குளம் பொலிஸ் பதில் பொறுப்பதிகாரி, குறித்த கடவையில் பணியாற்ற விருப்பம் தெரிவித்து மூவர் விண்ணப்பித்துள்ளனர் எனவும், அதற்குரிய நடவடிக்கை மிக விரைவில் எடுக்கப்படும் எனவும், சமிக்ஞை விளக் கைப் பொருத்துவதற்கு ரயில் திணைக் களத்துக்குச் சிபார்சு செய்யப்பட்டுள்ளது எனவும், மக்களின் எழுத்து மூலமான கோரிக்கைக் கடிதம் ரயில் திணைக் களத்தில் ஒப்படைக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இந்தப் போராட்டம் ஒரு மணித்தியால யம் முன்னெடுக்கப்பட்டது என்பது குறிப் பிடத்தக்கது.

## தீர்வுக்கு நீதியான .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் குறிப்பிட் டுள்ளார்.

அர்த்தபூர்வமான அதிகாரப் பரவலு டன் கூடிய சமஷ்டி முறையிலான அடிப் படையில் இனப் பிரச்சினைக்கான தீர்வு முன்வைக்கப்பட வேண்டும் என கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மீண்டும் தனது உரையில் வலியுறுத்தியுள்ளார்.

சமஷ்டி முறை அதிகாரப்பரவலாக்க நாடுகளே இன்று உலகில் பலம் வாய்ந்த நாடுகளாக இருப்பதாக குறிப்பிட்ட அவர், 1926இல் பண்டாரநாயக்காவே முதலில் சமஷ்டி முறை குறித்து வலியுறுத்தினார் எனச் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் பலாலி, மட்டக்களப்பு விமான நிலையங்கள் மீதான வரி அகற் றப்பட்டால் உலகெங்கும் வாழும் தமிழர் கள் உல்லாசப் பயணிகளாக வெளி நாட்டு நாணயத்துடன் நாட்டுக்குள் வரு வார்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள் ளார்.







காலைக்கதிர் Kalaikkathir

# 3,500 கோடி டொலரை திரட்டிக்கொள்வது தொடர்பான முன்மொழிவுகளை இரண்டாவது அறிக்கையில் முன்வைப்பு!

## சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு



2023 ஆம் ஆண்டு எதிர்பார்க்கப்பட்டுள்ள அரசாங்கத்தின் 3500 கோடி டொலரை திரட்டிக் கொள்வது தொடர்பான முன்மொழிவுகளை இரண்டாவது அறிக்கையில் முன்வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொருளாதார ஸ்தீரத் தன்மை தொடர்பிலான குறுகிய கால மற்றும் நடுத்தர கால நிகழ்ச்சித்திட்டங்களை அடையாளம் காணும் தேசிய சபையின் உப குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

2023 ஆம் ஆண்டு அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிப்பது தொடர்பான விடயங்கள் தொடர்பாக ஆராய்வதற்காக உள்நாட்டு இறைவரி திணைக்களம், இலங்கை சுங்கத் திணைக்களம் மற்றும் இலங்கை மதுவரித் திணைக்களம் ஆகிய வற்றின் பிரதிநிதிகள் தேசிய சபை யின் உபகுழுவில் முன்னிலையாகினர்.

நாடு பொருளாதார ரீதியில் வங்குரோத்து நிலை அடைவதற்கான காரணங்கள் என்ன? 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அமுல்படுத்தப்பட்ட வரித் திருத்தங்கள் காரணமாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் காணப்பட்ட வரிக் கோப்புக்களின் எண்ணிக்கை 14 லட்சத்திலிருந்து 5 லட்சம் வரை குறைவடைந்தமை மற்றும் அதனால் அரசாங்கத்துக்கு இழக்கப்பட்ட வரி வருமானம் தொடர்பாகவும் இங்கு அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் நாட்டுக்குள் மேற்கொள்ளப்படும் உத்தியோகபூர்வ பதிவுகள் அற்ற – அதாவது வைத்தியர்களுக்கான கட்டணம், சட்டத்தரணிகள் கட்டணம், மேலதிக வகுப்புக் கட்டணங்கள் ஆகியவற்றுக்கான கொடுப்பனவுகள் அதிகளவு பணம் புழக்கத்தில் இருப்பதாகவும் இவற்றுக்காக வரியை அறவிடுவது தொடர்பில் உரிய பொறிமுறை தயாரிக்கப்பட வேண்டும் என்று இந்த கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உலக ஒருமைப்பாடு தொடர்பான வருடாந்த அறிக்கை சுட்டிக்காட்டல்களுக்கு அமைய இலங்கையில் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செயற்பாடுகளில் அதிக விலைகள் காண்பிக்கப்படுவது அல்லது குறைந்த விலைகள் காண்பிக்கப்படுவது போன்று விமானம் மூலம் அல்லது கப்பல்கள் மூலம் நாட்டிலிருந்து பெருமளவிலான செல்வம் வெளிச் செல்வதாக தேசிய உப குழுவின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

மின்சாரப் பட்டியல், தொலைப்பேசிப் பட்டியல் மற்றும் வாகன உரிமைப் பத்திரம் போன்ற புறநிலைக் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு வரி அறவிடும் பொறிமுறை யொன்றை அறிமுகப்படுத்துவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் நாட்டில் எதனோல் அதிகமாகக் காணப்படுவதாகவும் இந்தத் தொகையை ஏற்றுமதி செய் வதற்கு நடவடிக்கை எடுப்பது தொடர்பிலும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

தென்னங்கள்ளு மற்றும் கித்துல் கள்ளு, ஆகிய வற்றை கனடாவுக்கு ஏற்றுமதி செய்ய ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக இலங்கை மதுவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டார். தங்கம், பணம், கொடுப்பனவுகள், பாதுகாப்புக் கடன்கள், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி, சொத்துக்களைப் பரிமாற்றல் போன்ற துறைகள் தொடர்பான செயற்பாடுகளை நிர்வாகம் செய்வதற்கு அனுமதி வழங்கல் மற்றும் கட்டுப்படுத்த அனுமதி வழங்கப்பட்டன.

1953 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க பரிவர்த்தனைக் கட்டுப்பாட்டு சட்டத்தை இரத்துச் செய்து இதற்குப் பதிலாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள 2017 ஆம் ஆண்டு அந்நியச் செலாவணிச் சட்டத்தில் தங்கம் நீக்கப்பட்டமையால் தங்கம் நகைகளாக எந்தவித கொடுப்பனவுகளும் இன்றி நாட்டுக்குள் கொண்டு வரப்படுவது பாரிய பிரச்சினையாகும் என சுட்டிக்காட்டப்பட்டது.

# தேர்தலை காலம் தாழ்த்தும் நோக்கம் அரசுக்கு இல்லை!

## அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு



பொருளாதார நிலைமை நெருக்கடி மிக்கதாகக் காணப்படுகின்ற போதிலும், உள்ளூராட்சிமன்றத் தேர்தலை காலம் தாழ்த்தும் நோக்கம் அரசாங்கத்திடம் இல்லை.

எதிர்க்கட்சியினர் சிறந்த வெற்றியைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று எண்ணிக் கொண்டிருக்கின்றனர். தேர்தலின் போது மக்கள் அவர்களுக்கு தக்க பதிலை வழங்குவர் என்று அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் நடைபெற்ற ஊடக வியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –உரிய நேரத்தில் தேர்தல் நடத்தப்படும் என்று நான் எதிர்பார்க்கின்றேன். தேர்தலின் போது ஒவ்வொருவருடைய பலத்தையும் அறிந்து கொள்ள முடியும்.

தற்போது தேர்தல் நடத்தப்படவேண்டும் என்பது மக்களின் தேவை அல்ல. மக்கள் தேர்தலைக் கோரவில்லை. எனினும் எதிர்க்கட்சியின் கோரிக்கையை அரசாங்கம் நிறைவேற்றும். தேர்தலில் மக்கள் அவர்களுக்கு சிறந்த பதிலை வழங்குவார்கள்.

நாடு பாரிய நெருக்கடியை எதிர் கொண்டுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் அதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படாதவர்களுக்கு மக்கள் எதிர்வரும் தேர்தல்களில் சிறந்த பாடம் புகட்டுவார்கள்.

கடந்த காலங்களில் ஐக்கிய தேசியக் கட்சிக்காக பாடுபட்டவர்களே இன்று சுதந்திரக் கட்சியின் முக்கிய பதவிகளில் நியமிக்கப்பட்டுள்ளனர். அந்தளவிற்கு கட்சி வங்குரோத்தடைந்துள்ளது.

எனினும் நாம் இன்னும் சுதந்திரக் கட்சியைக் கைவிடவில்லை. உண்மையான சுதந்திர கட்சியினர் இன்றும் எம் முடனேயே இருக்கின்றனர். நான் கடந்த 30 ஆண்டுகளாக அரசியலில் ஈடுபடுகின்றேன்.

எனினும் இதுவரையில் நான் எடுத்த எந்தவொரு தீர்மானமும் தவறாகவில்லை. தற்போது நாம் அதிகாரத்தைக் கைப்பற்றுவது எவ்வாறு என்று சிந்திக்கவில்லை. மாறாக நாட்டை எவ்வாறு கட்டியெழுப்புவது என்பது தொடர்பிலேயே சிந்திக்கின்றோம். – என்றார்.

# இம்மாத இறுதியில் ஓய்வுபெறவுள்ள 25 ஆயிரம் அரசாங்க ஊழியர்கள்!

இம்மாத இறுதியில் 60 வயதில் ஓய்வுபெறும் தீர்மானத்துடன், முழு அரச சேவையிலிருந்தும் சுமார் 25 ஆயிரம் பேர் ஓய்வுபெற உள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான அமைச்சின் செயலாளர் பிரியந்த மாயாதுன்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டில் முழு அரச சேவையிலும் சுமார் 15 லட்சம் பேர் உள்ளதுடன், இருபத்தைந்தாயிரம் பேர் ஓய்வு பெறுவதால் அரச சேவை வீழ்ச்சியடையாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

பொதுப்பணித்துறையில் உள்ள பெரும்பாலான உயர் அதிகாரிகள், 60 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, வரும், 31 ஆம் திகதி ஓய்வு பெறுவார்கள் எனவும் அவர் கூறியுள்ளார்.

மேலும், ஓய்வுபெறும் உத்தியோகத்தருக்கு மாற்றீடாக ஒருவர் இல்லாத சந்தர்ப்பங்களில் அரச சேவை ஆணைக்குழுவின் அனுமதியைப் பெற்று மேலும் ஒரு வருடத்துக்கு 60 வயதுக்கு மேற்பட்ட அதிகாரியைத் தக்கவைத்துக் கொள்ள முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

அரச சேவையை 65 வருடங்களாக நீடிப்பதாக முன்னர் எடுக்கப்பட்ட தீர்மானம் தொழில்நுட்ப அறிவுடன் கூடிய உயர் பதவிகளுக்கு இளைய அதிகாரிகள் செல்வதற்கு இடையூறாக இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே ஆசிரியர் பணியில் உள்ள சுமார் 2 ஆயிரம் பேர் 60 வயதில் ஓய்வு பெற உள்ள நிலையில், அதற்கு தகுதியானவர்களை நிரப்ப கல்வித்துறை அதிகாரிகளிடம் முறையான திட்டங்கள் இல்லை எனவும் இலங்கை ஆசிரியர் சங்க பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் குற்றம்சுமத்தியுள்ளார்.

இந்த வெற்றிடங்களுக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமிக்கப்படுபவர்களே நியமிக்கப்படுவதாகவும், சில சமயம் பல்கலைக்கழக பட்டதாரிகளை சேர்த்துக்கொள்வதாகவும் ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் எதிர்காலத்தைப் பொறுப்பேற்கப்போகும் குழந்தைகளுக்கு பாடம் சொல்லிக்கொடுப்பவர்கள் ஆசிரியர்கள் என்றும், அவர்களுக்கு பாடம் சொல்லிக்கொடுத்த ஆசிரியர்கள் ஓய்வு பெற்ற பின்னர், பாடசாலைகளைத் தேர்வு செய்து, தேவையான ஆசிரியர்களை உடனடியாக தேர்வு செய்ய வேண்டும் என்றும் ஸ்டாலின் கூறியுள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி விசேட வைத்திய நிபுணர்கள் உட்பட 200 வைத்தியர்கள் ஓய்வுபெறவுள்ளமையால் சுகாதார சேவையில் பாரிய பாதிப்புகள் ஏற்படக்கூடும் என அகில இலங்கை வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் ஜெயந்த பண்டார தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# பயணத்துக்கான கட்டணத்தை கோரியமைக்காக அங்கவீனமுற்ற ஓட்டோச் சாரதி மீது தாக்குதல்!

## இருவர் கைது

அங்கவீனமுற்ற சாரதி ஒருவர் செலுத்திச் சென்ற ஓட்டோவுக்கு கட்டணமாகச் செலுத்த வேண்டிய 2 ஆயிரத்து 500 ரூபாவை வழங்காமல் தப்பிச்செல்ல முயன்ற இரு சந்தேக நபர்களைச் சுற்றி வளைத்து கைது செய்த பொலிஸார் அவர்களை தலங்கம பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

கொட்டாவ நகரிலிருந்து தலவத்து கொட செல்வதற்காக இந்த ஓட்டோவில் ஏறிய இந்தச் சந்தேக நபர்கள் தலவத்து கொட சென்று பத்தரமுல்லைக்கு வந்து மீண்டும் கொட்டாவை சென்று தலவத்து கொட பிரதேசத்தில் உள்ள வங்கி யொன்றுக்கு சென்றனர் எனக் கூறப்படுகிறது.

இதன்போது ஓட்டோ சாரதி சந்தேக நபர்களிடம் ஓட்டோக் கட்டணத்தைக் கோரியபோது, அவர்கள் தப்பிச் செல்ல முற்பட்டதுடன், சாரதி அவர்களுடன் சண்டையிட முற்பட்ட போது, சந்தேக நபர்கள் இருவரும் சாரதியை கீழே தள்ளித் தாக்கியுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# மக்களுக்கு உண்மையைக் கூறுங்கள் அமைச்சர்களுக்கு ஜனாதிபதி அறிவுரை!

கிராமத்துக்குச் சென்று கிராமப் பொறிமுறையை பலப்படுத்துமாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அமைச்சர்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

ஆளும் கட்சியின் அமைச்சர்களுக்கு பிரதமர் தினேஷ் குணவர்தன ஏற்பாடு செய்திருந்த சந்திப்பில் கலந்துகொண்ட ஜனாதிபதி, அமைச்சர்களுக்கு இதனைத் தெரிவித்தார்.

கிராமங்களில் நாட்டின் பொருளாதார மற்றும் அரசியல் நிலைமைகள் தொடர்பில் மக்களுக்கு உண்மையைக் கூறுமாறு ஜனாதிபதி அவர்களுக்கு அறிவித்துள்ளார்.



இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.12.2022இல் வெளியிடப்பெற்றது.